விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 15 சனிக்கிழமை (31.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 224

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## தர்சிகாவின் உள் உறுப்புகளும் நேற்று தோண்டி எடுக்கப்பட்டன

### வைத்தியசாலை ஊழியர்கள் இருவர் கைது

(கொழும்பு)

வேலணை வைத்தியசாலையின் குடும்ப நல மருத்துவ உத்தியோகத்தர் தர்சிகாவின் மரணம் தொடர்பாக யாழ்.போதனா வைத்திய சாலையின் சுத்திகரிப்புத் தொழிலாளிகள் இருவர் ஊர்காவற்றுறை நீதிமன்றின் உத்தரவின் பேரில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். எதிர்வரும் 2ஆம் திகதி வரை இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த மருத்துவ மாதுவின் சடலம் கொழும்புக்கு பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட போது சடலத்தின் உட்பகுதியில் உள் உறுப்புக்கள் எவையும் இருக்கவில்லை என்று கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி ஊர்காவற்றுறை நீதிவானுக்கு (18ஆம் பக்கம் பார்க்க)



# ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் திருகோணமலையில் மூடப்பட்டது!

### நிதிவசதி இன்மையே காரணமாம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தின் நிதியில் திருகோணமலையில் இயங்கிவந்த சர்வதேச குடியேற்ற அலுவலகம் நேற்று மூடப்பட்டு விட்டது. இதைத் தொடர்ந்து நடத்துவதற்கு உரிய நிதி வசதி இல்லாமல் இருப்பதே இவ் மூடுவிழாவுக்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்ற போதிலும் உண்மைக் காரணங்கள் எவையும் கூறப்படவில்லை. (18ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைந்த புலிகளில் 3 ஆயிரம் பேர் விடுதலை

(கொழும்பு)

படையினரிடம் சரணடைந்தோரில் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் 3 ஆயிரம் பேர் வரையானோர் இதுவரை விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் சரணடைந்த முன்னாள் போராளிகள் 11 ஆயிரத்து 698 பேர் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு அடையாளம் காணப்பட்டிருந்தனர் என்றும் குறிப்பிடத்தக்கது.

விடுதலை செய்யப்பட்டிருக்கும் ஆயிரம் பேரில் பல்கலைக்கழக மாணவர்கள், சிறுவர்கள், ஊனமுற்றோர்கள், கர்ப்பிணிப் பெண்கள், இளம் தாய்மார்கள், சிறு குற்றம் செய்தவர்கள், நீதிமன்றால் நிரபராதிகளென விடுவிக்கப்பட்டவர்கள் ஆகியோர் அடங்குவர் என்று அவர் பட்டியல் போட்டார். (ச-5)

## பென்டகன் மீதான விமான தாக்குதலே புலிகளின் பின்னடைவுக்கு காரணம்



### ஆங்கில ஊடகத்துக்கு கே.பி. செவ்வி

(கொழும்பு)

அமெரிக்காவின் பென்டகன் இரட்டைக் கோபுரம் கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 11ஆம் திகதி அல்கொய்த இயக்கத்தினால் தாக்கப்பட்டமையே தமிழீழ விடு தலைப்புலிகளின் பின்னடைவுக்குப் பிரதான காரணம் என கே.பி. என்ற குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தமிழீழ விடு தலைப்புலிகளின் வெளியுறவுத்துறை பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் உள்நாட்டு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்தார்.

அவர் அதில் முக்கியமாக குறிப்பிட்டுள்ள தாவது,

இந்த தாக்குதலின் பின்னர் அனைத்து மேற்குத்தேய நாடுகளும் அனைத்து நாடுகளினதும் போராட்டக்குழுக்களுக்கு எதிராக (18ஆம் பக்கம் பார்க்க)

## அப்துல் காதர் எம்.பியின் உறுப்புரிமை நிறுத்தம்

(கொழும்பு)

கண்டிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.எம்.அப்துல்காதரின் செயற்குழு உரிமையை இடைநிறுத்த ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற வாக்கெடுப்புக்களின் போது அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தினால் அப்துல்காதரின் செயற்குழு உறுப்புரிமை இடைநிறுத்தப்படுவதாக கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உத்தியோக (18ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரின் முதல் எண்ணெய் கிணறு ஜனவரி மாதத்தில் தோண்டப்படும்

(கொழும்பு)

மன்னார் கடற்பிரதேசத்தில் எண்ணெய்க் கிணறு தோண்டும் நடவடிக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பெற்றோலிய துறை அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

கெய்ன் இந்தியா (தனியார்) நிறுவனத்தின் ஓர் அங்கமாக கெய்ன் சிறிலங்கா (தனியார்)நிறுவனம் தோண்டவுள்ள 3 எண்ணெய்க் கிணறுகளில் முதலாவது கிணறு ஜனவரி மாதம் தோண்ட ஆரம்பிக்கப்படும். இந்த எண்ணெய் அகழ்வு நடவடிக்கைக்காக கெய்ன்சிறிலங்கா நிறுவனம் உலகள வாவியரீதியில்கேள்விப் பத்திரங்களை கோரியுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். இத்திட்டத்திற்கு 18 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (18ஆம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேலுக்கான இலங்கை தூதரை பணியிலிருந்து நீக்குமாறு கோரிக்கை!

(கொழும்பு)


இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் டொனால்ட் பெரேராவை பணி நீக்குமாறு சில முஸ்லிம் அரசியல்வாதிகள் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.


டொனால்ட் பெரேரா பலஸ்தீனத்திற்கு எதிராக செயற்பட்டு வருவதாகவும் இதனால் அவரை பதவியிலிருந்து நீக்குமாறும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பலஸ்தீன விவகாரம் தொடர்பில் அண்மையில் டொனால்டோ பெரேரா வெளியிட்ட கருத்தினால் பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் பலஸ்தீனர்களுக்கு எதிரான வகையில் டொனால்ட் பெரேரா கருத்து வெளியிடவில்லை என (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





பேசு பொருளாக இனப்பெருக்க சுகாதாரம் கருத்துப் பகிர்வும் நூல் வெளியீடும் நேற்று தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் தாய்,சேய் குடும்பநல வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திருமகள் சிவசங்கர், யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆனந்தராஜா ஆகியோர் கருத்துரை வழங்குவதையும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான நூலினை ஐ.நா.சிறுவர் பாதுகாப்பு நிதிய மஹாடமாஜ் வெளியிட்டு வைக்க யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# உண்மையான ஜனநாயகத்துக்காக தொடர்ந்து போராடுவேன்-சரத்

தனது குடும்பம் மற்றும் தனது அரசியல் ஆதரவாளர்களை இலக்குவைத்து ராஜபக்ஷ நிர்வாகத்தினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கையின் மத்தியிலும் வாழ்ந்து வரும் தன் சுதந்திரம் மற்றும் சிறந்த நிர்வாகத்திற்காகவும் உண்மையான ஜனநாயகத்திற்காகவும் தொடர்ந்தும் போராடப் போவதாக ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தற்போது உள்ள இலங்கையை சிறந்த இலங்கையாக உருவாக்குவதற்காக தன்னால் இயன்ற தியாகங்களை செய்யத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தால் அரசியல் கைதியாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா உள்நாட்டு வெளிநாட்டு மக்களுக்காக விசேட செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

கடற்படை தலைமையத்தில் இருந்து கடந்த 20ஆம் திகதி அவர் சக இளைஞர்களுக்கான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பொலிஸார், முப்படையினர் உள்ளிட்ட பல தரப்பினருக்கு பொன்சேகா இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.நாட்டின் ஜனநாயக சமூகத்துக்குரிய உரிமைகள் இழக்கப்பட்ட ஒருவர் என்ற வகையிலும் ஐந்து மாதங்களுக்கு மேல் சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதி என்ற வகையிலும் தான் இந்தக் கடிதத்தை எழுதியுள்ளதாக சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக போட்டியிட்டதால் தான் பழிவாங்கப்படுவதாகவும் பல்வேறு பொய்யான குற்றச்சாட்டுக்கள் தன்மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும் சரத் பொன்சேகா கூறியுள்ளார்(ச-5)

## சொந்த பிள்ளைக்கு நெருப்பு வைத்த தாய்

சொந்த பிள்ளைகள் இருவரை நெருப்பினால் சுட்டுகொடுமைப் படுத்திய தாய் ஒருவர் அவிசாவளைப் பொலிஸ் நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.பிள்ளைகளின் தந்தை பொலிஸில் மேற்கொண்டிருந்த முறைப்பாட்டை அடுத்து இக்கைது இடம்பெற்றது.5 வயது மற்றும் ஒன்றரை வயதுச் சிறுவர்களே கைகளிலும் உடலிலும் தீக்காயம் அடைந்தவர்களாவர். இருவரும் தற்போது அவிசாவளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ச-5)


22.07.2010 முதல்

ஸ்ரீகாந், பிருத்விராஜ், கமாலினிமுகர்ஜி மற்றும் பலர் நடிப்பில்




செல்லா சினிமா(நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00

## உடன் வேலைவாய்ப்பு

திருகோணமலை போக்குவரத்து சேவைக்கு பேருந்து ஓட்டுநர் தேவை. தங்குமிட வசதி, உணவு வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

தொடர்புக்கு :-
0777685687

(2051)

## காணி தேவை

அல்லைப்பிட்டி மண்கும்பான் கடற்கரையில் உல்லாச ஹோட்டல் கட்டக்கூடிய காணி தேவைப்படுகிறது. 2 ஏக்கர் விசாலமான காணி விரும்பப்படும். முழு விபரங்களுடன் எதிர்பார்க்கும் விலையையும் குறித்து உடன் தொடர்புகொள்ளவும்.

முருகேசு & நீலகண்டன் சட்டத்தரணிகள்

தொடர்பு விபரம் :-

MURUGESU & NEELAKANDAN
Attorneys - at - Law & Notaries Public
M & N Building (Level 5)
2 Deal Place, Colombo- 3
Sri Lanka.
Tel : 0094-11-2371100
Fax : 0094-11-2371111/2371122
E-Mail : neela@mnlaw.lk

(C-778)


## கண்ணீர் அஞ்சலி

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு

### T.A.J.மதுரநாயகம் அடிகளார்



கிளிநொச்சி ஆரோபணம் (Boys town) சிறுவர் இல்லத்தின் இயக்குநராக இருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் ஏதிலிகளான எம் சிறார்களுக்கு அரும்பணி ஆற்றியவர். கத்தோலிக்க மதத்தினூடாக ஆன்மீகப் பணியை எல்லா மனிதர்களிடமும் பரவச் செய்வதில் முக்கிய பங்காற்றியவர். ஏழைச் சிறார்களின் கண்ணீர் துடைத்து கல்விப் பசிதீர்த்து அர்ப்பணிப்பூடாக இறைவனைக் கண்டவர். இவரது இழப்பால் துயருற்றிருக்கும் யாழ்.ஆயர், பங்குத் தந்தையர்கள், குருமார்கள், குடும்பத்தினருக்கு கிளிநொச்சி மாவட்ட மக்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா இறைவனோடு கலக்க பிரார்த்திக்கின்றேன்.

சி.சிறிதரன்
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்.

(இ)

## மரண அறிவித்தல்

### T.A.J.மதுரநாயகம் அடிகளார்



யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த மூத்தகுரு அருட்பணி T.A.J. மதுரநாயகம் அடிகளார் 27.07.2010 அன்று கொழும்பில் காலமானார். அடிகளாரின் பூதவுடல் 30.07.2010 அன்று அனுராதபுர புனித வளனார் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு திருப்பலியுடன் கிளிநொச்சியில் மக்கள் அஞ்சலிக்காகவும் பின்னர் யாழ்.பத்திரிசியார் கல்லூரியில் மாணவர்களின் அஞ்சலிக்காகவும் வைக்கப்பட்டது. அடிகளாரின் அடக்க திருப்பலி இன்று மாலை 4 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் யாழ் .ஆயர் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

குரு முதல்வர், ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

(C-776)

# இன்று ஒரு தகவல்

## மூன்று பிச்சைக்காரர்கள்

ஒரு ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் ஒரு கோடீஸ்வரர். பல நல்ல காரியங்களெல்லாம் செய்து கொண்டிருந்தார்.

அவரைத் தேடி நிறையப் பேர் வருவார்கள். இவரால் முடிந்த உதவியைச் செய்வார்.

ஒரு சமயம் மூன்று பிச்சைக்காரர்கள் இவரைத் தேடி வந்தார்கள். ஏதாவது பொருள் உதவி பெறலாம் என்று நினைத்த மூன்று பேரும் ஒரே நேரத்தில் வரவில்லை. தனித்தனியாக வந்தார்கள்.

முதல் பிச்சைக்காரன் காலையில் வந்தான். இவருக்கு முன்னால் வந்து நின்றான்.

“ஐயா, எனக்கு ஐந்து ரூபாய் வேண்டும். தயவுசெய்து கொடுங்கள்” என்று கேட்டான். இவன் இப்படிக் கேட்டதும் அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

“என்ன இது? நான் ஏதோ உன்னிடம் கடன்பட்டிருப்பது போலவும் அதைத் திருப்பிக் கொடுங்கள் என்று கேட்பது மாதிரியும் இவ்வளவு அதிகாரத்தோடு பிச்சை கேட்கிறாய்... எவ்வளவு துணிச்சல் உனக்கு? ஐந்து ரூபாய் எல்லாம் தரமுடியாது. இந்தா இரண்டு ரூபாய். எடுத்துக் கொண்டு ஓடு” என்று சொல்லி இரண்டு ரூபாய்க் குற்றியொன்றைத் தூக்கியெறிந்தார். அவன் அதை எடுத்துக் கொண்டு அங்கிருந்து போய் விட்டான்.

இரண்டாவது பிச்சைக்காரன் மத்தியானம் வந்தான். இவன் கேட்டான்:

“ஐயா, பத்து நாட்களாக ஒருவேளை உணவு கூட சாப்பிடவில்லை. தயவு செய்து எனக்கு உதவி செய்யுங்கள்” என்றான்.

“உனக்கு எவ்வளவு வேண்டும்?” என்று கேட்டார்.

“நீங்களாகப் பார்த்து எவ்வளவு கொடுத்தாலும் அது எனக்குப் போதும்” என்றான்.

“இந்தா, பத்து ரூபாய். இதை வைத்துக் கொள். ஏதாவது வாங்கிச் சாப்பிடு” என்றார். அவன் அந்தப் பத்து ரூபாயை வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

அதன்பின் மாலையில் மூன்றாவது பிச்சைக்காரன் வந்தான். இவன் எப்படிக் கேட்டான் தெரியுமா?

“மகாராஜா உங்களுடைய உயர்ந்த குணத்தைப்பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் உங்களைப் பார்த்து தரிசனம் பண்ணிக் கொண்டு போகலாம் என்று வந்தேன். அறவழியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள் தான் கண்கண்ட தெய்வம்” என்றான்.

உடனே அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா?

“ஐயா, தயவு செய்து உட்காருங்கள். நீங்கள் மிகவும் களைத்துப் போய் வந்திருக்கிறீர்கள். முதலில் சாப்பிடுங்கள். மற்றதைப் பின்னர் பார்க்கலாம்” என்று சொல்லி அவனை உட்காரவைத்து சாப்பாடு போட்டார்.

அவன் சாப்பிட்டு முடித்தான்.

அதன் பின் இவர் கேட்டார்.

“இப்ப சொல்லுங்க, நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?” என்றார்.

அந்தப் பிச்சைக்காரன் இந்த அன்புக்கு நெகிழ்ந்து...

“ஐயா, பசியோடு வந்தேன். அறுசுவை விருந்தே படைத்து விட்டீர்கள். அது போதும் எனக்கு வேறெதுவும் தேவையில்லை. நீங்கள் என் மீதுகாட்டும் அன்பை நான் எப்பொழுதும் மறக்கமாட்டேன். உங்களுக்கு எல்லாம் நல்லபடியாக நடக்கும். உங்களுக்கு ஒரு குறையும் வராது” என்றான்.

இவனுடைய பரிவான இந்த வார்த்தைகள்... அவருடைய மனதைத் தொட்டது. அவன் மீது இருந்த அன்பு பல மடங்கு அதிகமாகியது.

அதன் விளைவுஎன்ன தெரியுமா?

“இதோ பாரப்பா, இனிமேல் நீ வெளியில் எங்கேயும் போகவேண்டாம். இங்கேயே இருந்து விடு” என்றார்.

தன்னுடைய பங்களாவுக்குப் பக்கத்திலேயே அந்த ஆளுக்கு ஒரு வீடும் கட்டிக் கொடுத்தார். கடைசி வரைக்கும் அந்த ஆளைத் தனக்குப் பக்கத்திலேயே வைத்துக் கொண்டார்.

இந்தக் கதையை சுவாமி சிவானந்தர் சொல்லியிருக்கிறார். இறைவன் அந்தக் கோடீஸ்வரன் மாதிரியாம். அந்த மூன்று வகைப் பிச்சைக்காரர்களும் மூன்று வகையான பக்தர்களாம்.

இன்றைக்கு உள்ள பக்தர்களெல்லாம் இந்த மூன்று வகையில் ஒரு வகையைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். முதல் வகைதான் அதிகமாக இருக்கும். மூன்றாவது வகை மிகவும் அபூர்வம்.

எங்களூரில் ஒரு பெரியவர் இருந்தார். செலவு செய்யப் பயப்படுவார். ஒரு பைசா ஒருத்தருக்கு கொடுப்பதென்றாலும் யோசிப்பார்.

இவரைத் தேடி ஒரு நாள் சில பிச்சைக்காரர்கள் வந்தார்கள்.

“ஐயா, நாங்களெல்லாம் சேர்ந்து ஒரு பிச்சைக்காரர்கள் சங்கம் ஆரம்பிக்கிறோம். அதற்கு நீங்கள் ஆயிரம் ரூபாய் நிதியுதவி செய்யவேண்டும்” என்றார்கள்.

“அதெல்லாம் ஒன்றும் கொடுக்க முடியாது. அவ்வளவு பணம் என்னிடமில்லை” என்று சொல்லிவிட்டார்.

“சரி ஒரு நூறு ரூபாயாவது கொடுங்களேன்” என்றார்கள்.

“அதுவும் முடியாது” என்று சொல்லிவிட்டார்.

“பத்துக்காசாவது கொடுங்களேன்” என்றார்கள்.

“அது கூட என்னிடம் கிடையாது” என்றார் அந்தப் பெரிய மனிதர்.

“சரி அப்படியென்றால் ஒன்று செய்யுங்கள்” என்றார்கள்.

“என்னசெய்ய வேண்டும்?” என்றார்.

“நீங்களும் எங்கள் சங்கத்தில் ஒரு உறுப்பினராக சேர்ந்திடுங்கள்” என்றார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சமய அறிவுப் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் யாழ். மாநகராட்சிமன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் கடந்த ஆண்டு யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிப் பரீட்சையின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**தரம் 04**

யோ.நிருஷிகா (நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை),

இரண்டாம் இடம் இருவர் கி.கௌரிசுதன், (நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை), ப.கிஷானி (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), சி.கஸ்தூரி (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்),

**தரம் 05**

க.அபர்ணா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), பி.பவானிக்கா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி) தே.செந்தில்குமரன் (நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை),

**தரம் 06**

இ.துளசிகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) சி.இந்துஜன் (யாழ். இந்துக் கல்லூரி), ச.கஸ்தூரிகா (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை),

**தரம் 07**

ம.தரிசிகா (யாழ்.வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை), தி.ஆகாஷ் (யாழ். இந்துக்கல்லூரி), சிதருசாளினி (யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி),

**தரம் 08**

இத்தரத்திற்கான பரீட்சை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

**தரம் 09**

வி.ஆரணி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), யோ.கோபீர்த்தனா (யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் இருவர் பே.டினேஷன் (யாழ்.இந்துக் கல்லூரி), சி.சிவதர்சிகா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி),

**தரம் 10**

இ.வினு (யாழ். இந்துக் கல்லூரி), உ.சங்கீதா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), ப.பிரவீணா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை),

**தரம் 11**

சி.சரணீஜா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் இருவர் இ.ரவீந்திரராஜா, கி.லோஜனா (யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மூன்றாமிடம்இருவர் லோ.மயூரதி (யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி), க.கௌதமி (விக்கினேஸ்வராக் கல்லூரி),

**தரம் 12**

பூ.செல்வதியம்மா (யாழ். இராமநாதன் கல்லூரி), இ.துஜிதா (யாழ். இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), க.டர்சிகா (யாழ். இராமநாதன் கல்லூரி),

**தரம் 13**

ம.ஆரணிக்கா, லோ.மயூரி, ஞா.யசிதரன் (யாழ்.சாவகச்சேரி இந் துக் கல்லூரி)

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் குழுவின் தலைவரும் மாநகர ஆணையாளருமாகிய மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெறவுள்ளதாக குழுச் செயலாளர் இ.இரத்தினசிங்கம் அறிவித்துள்ளார். (6-4)

## புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை யின் யாழ். வளாகத்தினால் நாளை மறு தினம் திங்கட்கிழமை புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப் படவுள்ளது.

ஆறுமாத கற்கை நெறியான இதில் முற்சக்கர வண்டி திருத்துதல் உள்ளிட்ட கற்கை நெறி ஆரம்பமாகவுள்ள துடன் இதில் இணைய விரும்புவோர் தமது பெயர் விலாசங்கள் கல்வித் தகைமை உள்ளடங்கிய சுயவிபரக் கோவையை தாமே தயாரித்து, இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, இல. 375 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் சமூகம் தருமாறு மாவட்ட திட்டமிடல் இணைப்பாளர் இரா. அகிலன் அறிவித்துள்ளார். (6-4)

## பேசும் படம்



யுத்தம் தந்த வறுமை...

காட்சி-கிளிநொச்சி

## இராசி பலன்

31.07.2010
(ஆடி 15, சனிக்கிழமை)
பஞ்சமி பிற்பகல்4.28 மணிவரை
உத்தரட்டாதி முன்னிரவு 10.05மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை
சுபநேரம் 3.03-4.33 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரிய அலைச்சல், சுபசெலவு, உறவினர் சந்திப்பு, சயனசுகக் குறைவு. |
| இடபம் | போசன சுகம், குடும்ப மகிழ்ச்சி, பொருள்சேர்க்கை, பெருமையடைதல். |
| மிதுனம் | நண்பர்கள் சந்திப்பு, தொழில் சிந்தை, நல்ல தகவல், முயற்சி கைகூடும். |
| கடகம் | புதிய திட்டமிடல், சிந்தனை மிகுதி, திடீர் பயணம், எதிர்பாராத செலவு. |
| சிங்கம் | எதிர்பாராத பகை, எடுத்த காரியம் தாமதமாகும், பணக்குறைவு, அபகீர்த்தி. |
| கன்னி | குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும், தனவருவாய், நல்ல செய்தி. |
| துலாம் | புதிய முயற்சி, சத்துருஜெயம், விருந்துபசாரம், தேகநலன். |
| விருச்சிகம் | வியாபார சிந்தை, புத்திரரால் கவலை, அதிக செலவு, காரிய தாமதம். |
| தனுசு | சுபநிகழ்வு, வாகன சுகம், முயற்சி தாமதம், நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | வாக்கு மேன்மை, தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவருவாய், உறவினர் வருகை. |
| கும்பம் | நண்பர்கள் உதவி, வேலைச் சுமை, முயற்சி தாமதம், தனவிரயம். |
| மீனம் | தெய்வசிந்தை, கலந்துரையாடல், முயற்சி கைகூடும், விருந்துபசாரம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60. | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 110 |
| தக்காளி | 60 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 70 | 70 | 70 |
| கரட் | 120 | 120 | 130 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 50 | 70 | 50 |
| பாகற்காய் | 60 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 50 |
| பயற்றங்காய் | 60 | 70 | 45 |
| லீக்ஸ் | 110 | 130 | 130 |
| பீற்றூட் | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 140 | 140 |
| போஞ்சி | 80 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 15-20 | 20 | 15 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30-40 | 25 |



முன்பள்ளி சிறுவர்களுக்கான கணித செயல்நூல்களை மற்றும் கணித பாட உபகரணங்களை இணைப்பாளர்களுக்கு கையளிக்கும் நிகழ்வில் காமா அபாகஸ் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் பிரதீபரா மங்கல விளக்கேற்றுவதையும், வலிகாம வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குகநேசன் உரையாற்றுவதையும் வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் முன்பள்ளி இணைப்பாளர் ஒருவருக்கு செயல்நூல் புத்தகம் மற்றும் அபாகஸ் பயிற்சி நெறிக்கான உபகரணங்களை கையளிப்பதையும் கலந்துகொண்ட முன்பள்ளி ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்க 11 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் சங்கத் தலைவர் திருநாவுக்கரசு உதய சூரியன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாநகரசபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.பிராந்திய அணையாளர் திருமதி ப.சிவலிங்கம், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநதி ஆ.கேதீஸ்வரன், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், யாழ்.பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார், வடமராட்சி சுருக்கெழுத்தாளர் கழகத் தலைவர் எஸ்.குலசிங்கம், முன்னாள் மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத் தலைவர் இ.ரெட்ணசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)

## கலைப்பிரிவு மாணவர்களுக்கான மாபெரும் இறுதிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் தாசன் கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் க.பொ.த உயர்தர கலைப் பிரிவு மாணவர்களுக்கான மாபெரும் இறுதிக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 3ஆம்திகதி வரை பண்ணாகம் றோயல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ள புவியியல் பாடக் கருத்தரங்கிற்கு வளவாளராக பி.எஸ்.வி. தினேஷ்பொன்.நந்தவர்ணணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை தமிழ்ப்பாடக் கருத்தரங்கை ஏ.எம்.எம்.தாசன் நிகழ்த்தவுள்ளதுடன் எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்துநாகரிகம் கருத்தரங்கை கே.எஸ்.ரமணன் நிகழ்த்தவுள்ளார்.

அனைத்துப் பாடங்களும் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி 1.30 மணிவரை நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4)

## யாழ்.மாவட்ட முன்னணி கழகங்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் யாழ்.மாவட்ட முன்னணி கழகங்கள் பங்குபற்றும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் வாரத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை லீக், யாழ்.லீக், வலிகாம லீக் ஆகிய மூன்று லீக்குகளில் இருந்து சிறந்த அணிகளுக்கு அழைப்பு விடுவிக்கப் பட்டுள்ளது.

இதற்மைவாக வலிகாம லீக்கில் இருந்து அணிகளான ஞானமுருகன், சென்.கென்ரீஸ் மற்றும் யாழ்.லீக் அணிகளான பாடுமீன், சென்.மேரீஸ், சென்.அந்தனீஸ், றோயல், சென்.மைக்கல் -புத்தூர் எவரஸ் ஆகியவையும் பருத்தித்துறை லீக்கிலிருந்து வதிரி டைமன்ட்ஸ், மணற்காடு சென். அன்ரனீஸ், சென்.சேவியர், கலட்டி ஐக்கியம், கலைமதி, நவசக்தி, மனோகரா, பருத்தித்துறை ஐக்கியம் ஆகிய அணிகளும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் முதல் சுற்றுப்போட்டியில், நொக் அவுட் முறையிலும் அடுத்த சுற்றுப் போட்டி லீக் முறையிலும் மின்னொளியில் நடைபெறவுள்ளன.

அழைக்கப்பட்ட கழகங்களின் தலைவர் , செயலாளர்கள், போட்டி அட்டவணை தயாரிப்புக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 4 ஆம்திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மைக்கல் விளையாட்டுக்கழகத் தலைவர் எஸ்.செல்வதீபன் தலைமையில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு விருந்தினர்களாக, வலிகாம லீக் உதைபந்தாட்ட செயலாளர் நா.லோகலிங்கம், யாழ்.லீக் செயலாளர் முடியப்பு பிரான்சிஸ் மற்றும் பருத்தித்துறை லீக் செயலாளர் வி.வரத ராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-24)

## முன்பள்ளி விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு பவானி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு க.பேரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தொண்டைமானாறு தெற்கு (ஜே/383) கிராம சேவையாளர் என். சேகர் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய ஆசிரியர் இ.ஸ்ரீநடராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

✠✠✠

(அச்சுவேலி)

புத்தூர் மேற்கு விடி வெள்ளி முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆலோசகர் ஐ. ஜெகநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதமவிருந்தினராக யாழ். கல்வி வலய முன்பள்ளி உதவிகல்விப் பணிப்பாளர் எஸ்.விமலநாதன், சிறப்பு விருந்தினராக அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் இ.யோகராசா ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)




## ஆடிப்பூர திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பன் ஆலய ஆடிப்பூரத்திருவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இத்திருவிழாக் காலங்களில் தினமும் பகல் விசேட அபிஷேகங்களும் பூஜைகளும் இலட்சார்ச்சனையும் திருமுறைப் பாராயணமும் இடம்பெறவுள்ளது.

இதில் இறுதி நாளான எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை பூர நட்சத்திர தினத்தன்று பகல் மூலமூர்த்தி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும், உற்சவ மூர்த்தி அம்பாளுக்கு விசேட திரவிய அபிஷேகம் நவோத்திர சகஸ்ர மகா 1008 சங்காபிஷேகமும் ஏனைய மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகங்களும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து பூஜை பூரகர்மா ருதுசாந்தி , தீபாராதனை , வேதஸ்தோத்திர திருமுறைப்பாராயணம் , புஸ்பாஞ்சலி , திருவூஞ்சல் ஆகியனவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் அழகிய தாமரைப்பூ வாகனத்தில் ஆரோகணித்து வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (4)

## யாழ்.மாநகரசபையின் சுகாதார பிரிவினரால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(கொழும்புத்துறை)

யாழ்.போதனா வைத்தியசாலையில் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் பிரதி புதன்கிழமை தோறும் டெங்கு நுளம்பு அழிப்பதற்கான இயந்திரம் மூலம் புகையூட்டல் நடவடிக்கை நடைபெற்றுவருகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு பகுதி நடவடிக்கையாக இயந்திர புகையூட்டல் மூலம் யாழ். போதனா வைத்தியசாலையில் டெங்கு நுளம்பினை அழிக்கும் நோக்கில், யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் யாழ்.மாநகரசபையும், நல்லூர் பிரதேச சபையும் இணைந்து நாவாந்துறை பிரதேசத்தில் அமைந்துள்ள காக்கைவெளி பகுதியில் புகையூட்டல் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து டெங்கு நுளம்புகளின் தாக்கம் காணப்படும் இடங்களை அடையாளம் காணப்பட்டு இப்பிரிவினரால் இயந்திர மூலம் புகையூட்டல் நடவடிக்கை மேற் கொள்ளப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. (2-51)

## பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு நற்பணிமன்ற அனுசரணையுடன் வளர்மதி பாலர் பாடசாலை விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாலர் பாடசாலை மைதானத்தில் நற்பணி மன்றத்தலைவர் இ.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பருத்தித்துறை மாவட்டம் சாரணர் ஆணையாளர் மு.இரவீந்திரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கரவெட்டிப் பிரதேச பொறுப்பாளர் இ.செந்தில்நாதன், வடமராட்சி முன்பள்ளி இணைப்பாளர் திருமதி எஸ்.சுரேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-4)

## வடமாகாண மாபெரும் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 3 ஆம் திகதி வரை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம் சாள்ஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-4)

# இறை பணி தொடர இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்

## பங்குத் தந்தையின் ஆசியுரை

"வல்லவராம் கடவுள் எனக்கு அரும் பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர்." (லூக் 1:49)

இறைவனால் முன்குறிக்கப்பட்டு. அவரது அருளினால் அழைக்கப்பட்டு தேவ வல்லமையால் திருநிலைப்படுத்தப்பட்டு இறையன்பின் சாட்சியாக வாழ அழைக்கப்பட்ட இறை ஊழியன் ஜோண் செல்வம் அடிகளாருக்காக இறைவனுக்கு நன்றி நவில்கின்றேன்.

கடந்த கடினமான காலப்பகுதியில் இறைவல்லமை நிறைவாகவே இவருடன் இருந்திருக்கின்றது. உடைந்து நொந்து உருக்குலைந்து இருந்த எம் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நற்செய்தியாளனாக அருட்தந்தை செயற்பட்டிருக்கிறார். இதுவே தகுந்த காலம் மாறுங்கள் என்று இக்காலச் செய்தியுடன் வடக்கின் எல்லாப் பகுதிகளிலும் பணியாற்றியிருக்கின்றார். இவரது முயற்சிக்கெல்லாம் இறையருளினால் பயனுற்றவையாக இருக்க அருள் இருந்து ஆசித்து நிற்கின்றேன்.

*பங்குத்தந்தை*
*நெடுந்தீவு.*

## இறைபணி தொடர இறைஞ்சுகிறோம்

பதினைந்து ஆண்டுகளாக குருத்துவப்பணியில் வருடம் தோறும் எழுதி வெளியிட்ட தனது ஆளன்மீகச் செய்திகளை நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபைக் குரு ஜோண் செல்வம் அவர்கள் அவற்றையெல்லாம் இன்று ஒரு நூலாக வெளியிடமுன்வந்திருப் பது அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் ஒரு வரப்பிரசாதம் ஆகும். அப்புனிதமான பணியில் வாழ்த்துரை என்ற வட்டத்திற்குள் இருந்து என்னையும் பதிவு செய்து கொள்வதில் ஆன்மீகத் திருப்தி அடைகிறேன். இந்த நுலைப்படைத்திருக்கும் திருச்சபைக் குரு ஜோண் செல்வம் அவர்கள் சமகாலத்தில் பலதரப்பட்ட மக்களால் மதவேறுபாடுகள் கடந்த நிலையில் உயர்வாக மதிக்கப்படும் கிறிஸ்தவ மதப்போதகர்களில் ஒருவராகக் காணப்படுகிறார். இருபத்தைந்து வயதிற்குள் கல்லூரிப் படிப்பையும் மருதனார்மட இறையியல் கல்லூரியில் தன் குருத்துவப் படிப்பையும் முடித்துக் கொண்ட இந் நூலாசிரியர் இருபது வயதிலி ருந்து கிளிநொச்சி, முரசுமோட்டை, விஸ்வமடு, கோணாவில் பாரதிபுரம், அக்கராயன் முதலான ஊர்களில் இடர்மிகுந்த கால கட்டத்திலும் சிறுவர் இல்லக் காப்பாளர்,நற்செய்தி தூதுவர் ஆலய இறைபணி எனப் பல பணிகளை ஆற்றி துன்பப்பட்ட எம் மக்களுக்கு கலங்கரை விளக்காக இருந்துள்ளார்.அக்கால கட்டத்தில் அவர் வெளியிட்ட ஆன்மீகச்செய்தி களேதுன்பப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் மருந்தாக இருந்துள்ளதென்பதை இந்நூலில் வரும் ஆன்மீக செய்திகளில் இருந்து கற்றுக்கொள்ளலாம் அவர் கிறிஸ்தவ மதத்திற்கும், அம்மக்களுக்கும் ஏனையவர்களுக்கும் ஆற்றிய புனிதமான பணிகள்தான் அவர் மிக இளமையிலேயே உதவிக்குரு அபிசேகராக (1997) குருத்துவப் பட்டத்திற்கு (2000) உரியவராக ஆசீர்வதிக்கப்படக் காரணமானவர்.

*பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்*
*தலைவர், வரலாற்றுத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

## 15 வருட பணி நிறைவில் மனநிறைவுடன் ஓர் வாழ்த்து மடல்

*"கடவுளின் பணியாளர்கள் அவரது முகத்தைக் காண்பவர்கள் அவரது பெயர் அவர்களுடைய நெற்றியில் எழுதப்பட்டிருக்கும்"*
(திரு.வெளிப்பாடு 22:3, 4)

இறையரசின் திராட்சைத்தோட்டத்தில் 15 வருட நிறைவு காணும் எனது அருமை நண்பர் அருட்திரு யோன் செல்வம் அடிகளாருக்கு அவரது தளராத உண்மையும் மகத்துவமான பணியை வாழ்த்தக் கிடைத்த வாய்ப்புக்காக இறைவா உமக்கு நன்றி.

அவரைப்பல வருடங்களாக நன்கு அறிந்தவன். அவருடன் இணைந்து கோணாவில், விசுவமடு பின் நெடுந்தீவு எனப்பல இடங்களில் அவர் பணிபுரிந்த வேளைகளில் அவரின் அன்பார்ந்த அழைப்பில், உழைப்பில் பல அனுபவங்களை அவர் மூலம் பெற்றுக் கொண்டவன். என்ற முறையில் அவரின் சிறப்புக்களைக் கூறுவதில் பெருமையடைகின்றேன்.

அவர் நற்செய்தி நன்றுரைக்கப்பட வேண்டும் என்ற மனவாஞ்சை கொண்டு நாட்டின் போராட்ட சூழலின் கடுமையான வேளைகளில் அயராது பணிசெய்தார். அவருடைய ஊழியம் நெடுந்தீவிலும் ஏழுவருட நிறைவு காண்கிறது. அவருடைய அயராத உழைப்பும் ஆன்மீக வழிகாட்டலும் கல்விப்பணியும் பெரு விருட்சமாக கிளைபரப்பி என்றும் மக்கள் மனதில் பசுமையாக நிறைந்திருக்கும். என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடம்மில்லை என உறுதியாக நம்புகிறேன்.

*இறைவனின் திராட்சைத் தோட்டத்தில்*
*ஈனோக்பூ-புனிதராஜா*
*டிலோ ரேச்சல் சன்ரா*

## வாழ்த்துச் செய்தி


வண.ஜோண் செல்வம் கடந்த 7 வருடங்களாக நெடுந்தீவில் பணியாற்றிய போது அவரை நான் அறிந்து கொண்டேன்.இவர் தனது ஆரம்பக் கல்வியைத் தெல்லிப்பளை கட்டுவன் மகா வித்தியாலயத்திலு பின்பு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் தொட ந்தார்.மருதனார் மட இறையியல் கல்லூரியில் குருத்துவப் படிப்பை பயின்றார்.முரசுமோட்டை,விசுவமடு ஆலயங்களில் இறைபண புரிந்தார்.இந்த இரு திருச்சபைகளிலும் நன்கு பணியாற்றிய பின் கொழும்பு திருச்சபையில் பேராயர் S.ஜெபநேசன் அவர்களால் உதவிக் குருவாக அபிஷேகம் செய்யப்பெற்றார்.

தொடர்ந்து வண.ஜோண் செல்வம் வன்னி –சுதந்திரபுரத்துக்கு மாற்ற லாகிச் சென்றார்.அங்கு ஒரு புதிய ஆலயம் திறப்பதற்கு உதவி புரிந்தார் அத்துடன் நற்செய்திப் பணியையும் திருப்திகரமாகச் செய்தார். தன் மேய்ப்புப் பணியை பரந்தளவில் வன்னியில் நிறைவேற்றினார். கிளி நொச்சி,கோணாவில், அக்கராயன்,முறிப்பு, பாரதிபுரங்களில் பண செய்துள்ளார்.

7 வருடங்களாக வண.ஜோண் செல்வமும் அவரது மனைவியு நெடுந்தீவுப் பங்கில் பணிபுரிந்தனர்.நெடுந்தீவு மத்தியிலும் மேற்கிலு சிறுவர் பராமரிப்பு நிலையங்களை நடாத்துகின்றனர்.நெடுந்தீவு மேற்கில் லண்டனில் வாழும் ஒரு குடும்பத்தின் உதவியுடன் ஒரு கணனிப்பயிற் நிலையத்தையும் ஒழுங்குபடுத்தியுள்ளார்.எனவே இரு இடங்களுக்கு இடையில் துவிச்சக்கரவண்டி உதவியுடன் சென்று சிறப்பாக நிர்வாகங் களை நான் கண்டிருக்கிறேன்.

நெடுந்தீவு மக்களால் நேர்மையான,சிறந்த பணியாளராகக் கருத பட்டதால் அவர்களின் மதிப்பு, மரியாதையைப் பெற்றுள்ளார்.அவரு அவர் குடும்பமும் எங்கு சென்றாலும் இறை மகிமைக்காக நற்பணி புரிய இறைவனிடம் செபிக்கிறோம்.

*Dr.K.E. சந்திரபால்*
*செயலாளர்,*
*யாழ். தென்னிந்திய திருச்சபை முன்னாள் அங்கத்தவர்.*



R.ஜோண் செல்வம் அடிகளார்

**குருத்துவ பணியில் 15 ஆண்டு நிறைவையும் நெடுந்தீவில் 7 ஆண்டுகள் பணியையும் நிறைவு செய்து ஆன்மீக செய்தித் தொகுப்பு நூலை வெளியிடும் எமது சபைக்குரு அருட்திரு R.ஜோண் செல்வம் அடிகளாரை இறை பணி சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

**தென்னிந்திய திருச்சபை மக்கள் நெடுந்தீவு**
**பகற்பராமரிப்பு நிலையும் - நெடுந்தீவு மத்தி**
**பகற்பராமரிப்பு நிலையம் - நெடுந்தீவு மேற்கு**
**(பிள்ளைகள், பெற்றோர், ஆசிரியர், பணியாளர்கள்.)**
**சபையின் செயலாளர்.**
**திரு.கே.ஜனேந்திரன்.**

## இறைபணியைத் தன் பணியாகக் கொண்டு செயற்பட்டவர்

உன்னைப் பெயர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்று கர்த்தர் மோசேக்கு சொன்ன வண்ணமாக இறைபணிக்காக அழைத்து இன்று பல்வேறு செயற்பாடுகளை அருட்பணியாளர் ஜோண் செல்வம் அவர் களுக்கூடாக இறைவன் தாமே பல்வேறு செயற்பாடுகளை மேற் கொண்டுள்ளார்.

தாயின் கருவில் இருக்கும் போதே நான் உன்னைத் தேர்ந்தெடுத்தேன் இவரின் பிறப்பிற்கு முதலே கடவுள் தன்னுடைய பணிக்காக தெரிவு செய்துள்ளார்.1970 ஆம் ஆண்டு பிறந்த இவர் தன்னுடைய ஆரம்பக் கல்வியினை தனது ஊராகிய தெல்லிப்பளை கட்டுவன் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று பின்னர் மிகுதிக் கல்வியினைத் தொடர்ந்தார்.இவர் தன்னுடைய கல்வி கற்கின்ற வயதிலேயே ஆன்மீக செயற்பாடுகளை மேற்கொள்வதில் ஆவலாகச் செயற்பட்டார்.

ஒருவருடம் முறிப்பு சலோம் இல்லத்தில் தான் இல்லத்தில் பெற்ற தன் நன்றிக் கடனாகவும் கடவுளின் நற்செய்தியை அறிவிக்கும் ஒரு தூது வனாகவும் இறை ஊழியத்துக்கு போகு முன்னர் ஆயத்தப் பணியாக மேற் கொண்டு 1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இறையியற் கல்லூரியில் இணைந்து 1995 ஆம் ஆண்டு வரையான நான்கு ஆண்டுகள் தனது இறை யியற் கல்லூரியின் கல்விதனை நிறைவு செய்து பிணியாளிகளுக்கு வைத்தியர் போல் வன்னிப்பிரதேசத்திலே துன்பத்தில் வாடிய மக்களுக்கு துயர் தீர்க்க இறை ஊழியனாகச் சென்றார்.

பல்வேறு கஷ்டங்கள் , தடைகள்,சோதனைகள் வந்த வேளையிலும் இறைவன் மீதுகொண்ட அன்பினால் அனைத்தையும் வென்று இறை பணியைத் தன்பணியாகக் கொண்டு செயற்படுத்தினார். பிறந்தோம், வாழ்ந் தோம்,இறந்தோம் என்றிராமல் எதைச் சாதித்தோம் என்பது தான் முக்கி யம்.அதிலும் தேவ சித்தம் அழைக்கப்படுவது என்பது போற்றப்பட வேண்டியதே.பவுல் அடிகளார் குறிப்பிடுவது போல் தன்னுடைய இறை ஊழி யத்தின் இலக்கை நோக்கிச் செயற்பட்டு வருகின்றார்.

1997 ஆம் ஆண்டு கொழும்பு திருச்சபையில் பேராயர் அதிவண கலாநிதி. S.ஜெபநேசன் அவர்களால் உதவிக்குருவாக அபிஷேகம் பெற்று தொடர்ந்து வன்னிப் பிரதேசத்திலேயே ஊழியத்தினை மேற்கொண்டு வந்தார்.1998 ஆம் ஆண்டு சுதந்திரபுரத்தில் ஊழியம் செய்த காலத்தில் இறைவனுக்காய் புதிய ஆலயத்தை கட்டித் திறந்து வைத்தார்.1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2003 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிளிநொச்சி, கோணாவில் முறிப்பு, பாரதிபுரம் போன்ற பகுதிகளில் மக்களோடு மக்களாய் கலந்து இறைபணியோடு சமூகப் பணியையும் செய்து வந்தார் ஊழியத்தின் ஆரம்ப காலம் தொட்டு கஷ்டப்பட்ட மக்களுக்காக தனது சேவையினை வழங்கி 15 வருடங்களை நிறைவு செய்துள்ளார். கடவுள் பலப்படுத்தி அவருக்கூடாக பல செயற்பாடுகளை செயற்படுத்தி வந்துள்ளார் தொடர்ந்தும் இவருடைய ஊழியத்தால் பல ஆத்துமாக்கள் ஆதாயமாக்கப்படவும் வருத்தப்படுகின்ற மக்களுக்கு உதவி வழங்கவும் இவருடைய சேவை எங்கு சென்றாலும் சிறந்து விளங்கிட இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

*கு.ஜனேந்திரன்*
*செயலாளர்,*
*தென்னிந்தியத் திருச்சபை, நெடுந்தீவு.*

## ஆசிச்செய்தி

நெடுந்தீவு மத்தியில் தென்னிந்திய திருச்சபை நடுநாயகமாக ஆன்மீகத்தையும் மாணவர் சிறார்களின் நலன் கருதி நாட்டில் நற் பிரைஜைகள் ஆக்குவதற்கு முன்னோடியாகவும் பராமரிப்பு நிலையத்தை தன்னகத்தே கொண்டு தனது மகத்தான அளப்பரிய சேவையை நடாத்திவருகின்றது. இதன் சேவை தொடர, வளர திருச்சபை வணக்கத்திற்குரிய மத குருமார்களும் தமது இறைபணியோடு பொதுப்பணிகளும் பணியாற்றி வருகிறார்கள். இந்த வரிசையில் மதிப்பிற்குரியவரும் என்றென்றும் மக்கள் மனதில் இடம் பிடித்து கொண்டார் ஜோண் செல்வம் போதகர் ஐயா அவர்கள். செல்வம் என்கின்ற திருநாமத்திற்குப் பொருத்தமாகவும் எவரையும் தனது புன்னகையுடன் அன்பாக வரவேற்று பண்பாக உபசரித்து தனது பணியை அவர்தம் பாரியார் உதவியுடன் செய்து வந்தார்.

நான் பல தடவை மேடைகளிலும் பொதுக் கூட்டங்களிலும் தனது அறிவுசால் கருத்தை நல்ல முறையில் ஒழுங்காக நல்ல கருத்தை உள்ளடக்கி வெளிப்படுத்துவார். ஏழு ஆண்டுகாலம் பணி செய்தமைக் காகவும் சமய நெறியிலும் புதிய ஆலயம் கட்டுவதற்கு தனது முயற் சியை மேற்கொண்டவரும் சபையினரையும், ஆசிரியர்கள், பணியாளர் களையும் நல்ல முறையில் வழிநடத்திய ஜோண்செல்வம் ஐயா, அம்மா, பிள்ளை இவர்கள் சேவை எங்கு சென்றாலும் சிறப்பாக இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது குடும்பத்தின் சர்பாகவும் இந்துமத மக்கள் சார்பாகவும் ஆசி கூறி நிற்கின்றேன்.

*கு.புவனேந்திரசர்மா*
*இந்துமத குரு, நெடுந்தீவு-10*

## வாழ்த்துரை

அருட்பணி ஜோண் செல்வம் அவர்களின் இந்நூலுக்கு வாழ்த்துரை எழுதுவதனைப் பெரும் பாக்கியமாக கருதுகின்றேன் மனிதன் சுதந் திரமாகப் பிறக்கின்றான். ஆனால் நாளடைவில் தளைகள் அவனைப் பிணைக்கின்றன. அறிஞர் ரூசோவின் வாக்கு வாழ்க்கை என்பது பஞ்சு மெத்தையல்ல. போராட்டங்கள் நிறைந்தவை என்பது அறிஞர்களின் அனுபவ வாக்கியம் போதகர் குடும்பத்தில் பெரும் தளையாக இறைபணி பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. ஏனையபணிகளை போலல்ல இறைபணி மிகவும் கடினமானது.

எனது இருபது வருட அனுபவத்தில் நான் கண்டு கொண்ட உண்மை இது. இப்பணியில் கடந்த கால அனுபவங்கள் தற்கால எதிர்கால வாழ்வுக்கு உர மூட்டுபவை.

போதகர் குடும்பத்தில் கடந்தகால அனுபவ பகிர்வுகள் அந்தந்தக் காலத்திற்கு ஏற்புடையதாக அமைந்துள்ளமை சிறப்பான அம்சங் களாகும். இவை ஏனைய இறை பணியாளர்களின் வாழ்வுக்கு பெரும் உதவியாக அமையும் என்பது எனது நம்பிக்கை. போதகர் ஜோண் செல்வம் நூல்களை வெளியிடுவதில் பெரும் வித்தகர் .நாம் இருவரும் சந்திக்கும் போது இறையியல் அனுபவங்களை என்னுடன் வாதிடுவார்.

அருள் மனையும் மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் அவரின் இப்பணிக்கான ஆயத்த களங்களாக அமைந்தன. நான் இறையியல் கல்லூரியில் கல்வி கற்ற காலத்திலிருந்தே ஜோண் செல்வத்தை நன்கறிவேன். போதகர் குடும்பத்தின் இறைபணி மென்மேலும் சிறப்பாக அமைய எனது குடும்பத்தின் வாழ்த்துக்கள்.

*அருட்திரு பெஞ்சமின் ஜெயராஜா*

## யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய அதிபரின் வாழ்த்துச் செய்தி


தென்னிந்தியத் திருச் சபையின் வணபோதகர் ஆர்.யோண் செல்வம் அடிகள் தமது குருத்துவ வாழ்வின் 15 ஆம் நிறைவை நிறைவுள்ளதாக நினைவு கூரும் வகையில் நீடித்து நிலைக்கும் சின்னமாக தான் எழுதிய ஆன்மீகச் செய்திகளை தொகுத்துப் புத்தகமாக வெளிக்கொணரும் முயற்சியை மனதாரப் பாராட்டுகின்றேன். போர்ச்சூழல், அகதிவாழ்வு அவலம், அநியாயம், சமாதானச் சாயம் பூசப்பட்டகாலம், தமிழினத்தின் நிர்க்கதிச் சூழல் என பல காலப்பகுதிகளை உள்ளடக்கிய அந்தப் பதினைந்து ஆண்டுகாலச் செய்திகள் காலத்தின் கண்ணாடியாய் எதிர்காலச் சந்ததியினருக்கு அவ்வக் காலக்கருத்தினை எடுத்தியம்பும் இலக்கியமாக மிளிரும்என எதிர்பார்க்கலாம்.

மறை பரப்பும் போதகராக - ஆன்மீகவாதியாக - அமைதிப் பணிபுரிகின்ற போதகரின் உள்ளத்துணர்வுகள் நாட்டில் நிகழ்ந்த மாறுபட்ட சூழலை நடுநிலைவாதியாக நின்று சிந்தித்து எழுதிய கருத்துக்கள், அக்கருத்துக்களுக்கேற்ப விபிலியத்திலிருந்து பெறப்பட்ட வேதவாக் குக்கள், அவற்றின் பொருத்தப்பாடு ,இறை வேண்டுதல் என இன் னோரன்ன விடயங்களை தன்னகத்தே கொண்ட ஆன்மீகச் செய்திகள் தொகுக்கப்பட்டு புத்தமாகும் போது நிச்சயமாக அது ஒரு வரலாற்றுச் சான்றாக மிளிரும் என்பதில் ஐயமில்லை.

''ஊழையும் உப்பக்கம் காண்பார் உலைவு இன்றித் தாழாது உற்றுபவர்'' என்ற தெய்வப்புலவர் வாக்குக்குப் போல எறும்பின் உழைப்பையும் ஆந்தையின் விழிப்பையும் தான் மூலதனமாகக் கொண்டு ஆடம்பரமின்றி அமைதியாகப் பணியாற்றுபவர் போதகர் ஆர். ஜோண்செல்வம் அடிகள். ஏழைகளின் சேவையையே இறைசேவை என்ற தாரக மந்திரத்தை தலை மேற்கொண்டு தனது 15 ஆண்டுகால சேவை யையும் இடர்களும், இன்னல்களும் அதி கஸ்டங்களும் நிறைந்த பிரதேசங்களிலே செய்து அந்த மக்களின் இன்ப துன்பங்களில்தானும் ஒருவனாக இணைந்து பணியாற்றியவர் . ஏழை எளிய மக்களின் வாழ்வின் ஒளிக்கீற்றாக ஏழைகளின் கல்விக் கண் திறக்கும் ஞான ஊற்றாகவும் பணியாற்றுபவர். "என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற அப்பர் சுவாமிகளின் அருள்வாக்குப் போல எந்த வேளையிலும் மனமுவந்து பணியாற்றும் நற்பணியாளர்.எமது தீவகத்தில் போதகர் ஆர். ஜோண் செல்வம் ஏழு ஆண்டு இறைபணி என்பது ஏழேழு ஆண்டுகளில் ஆற்றியிருக்கக்கூடிய பணிகளை அவர் ஒரு குறுகிய காலத்தில் ஆற்றி எம்மக்கள் உள்ளங்களில் எல்லாம் நீங்கா இடம் பெற்றுள்ளார். போதகர் ஆர்.ஜோண் செல்வம் அவர்களுக்கு இறைமகன் இயேசு நீடித்த ஆயுளையும் நிறைந்த ஆற்றலையும் வழங்கப் பிரார்த்திப்பதோடு அவரின் முயற்சி வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

*சத்தியவரதன்*
*நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.*





சொண்ட் நிறுவனத்தினால் யாழ். மாவட்ட திட்டக் கிராமங்களிலுள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் நிர்வாக அங்கத்தவர்களிற்கான திறன் வளர்ப்புப் பயிற்சி அண்மையில் நடைபெற்றது. இதில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி துணைப் பீடாதிபதி எஸ்.ஆர். சத்தியேந்திரம்பிள்ளை ஆரம்ப உரையாற்றுவதையும் சொண்ட் நிறுவனப் பணிப்பாளர் ச.செந்துராசா பயிற்சி நடத்துவதையும் பயனாளிகள் ஆர்வத்தோடு பயிற்சியில் கலந்து கொள்வதையும் படங்களில் காணலாம்.

# திருட்டுச் சம்பவம் தொடர்பாக இருவருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

பருத்தித்துறை மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் களஞ்சிய அறையை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அப் பாடசாலைக்கு உலக வங்கியினால் வழங்கப்பட்ட உணவுப்பொருட்களையும் சொத்துக்களையும் திருடியுள்ளனர். இச் சம்பவம் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மேற்குறித்த பாடசாலைக்கு உலக வங்கியினால் வழங்கப்பட்ட உணவுப் பொருட்களான மா மூடை, அரிசி மூடை மற்றும் தேங்காய் எண்ணெய் போன்றவை களவாடப்பட்டதுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரம் , துவிச்சக்கர வண்டி ஆகியனவும் களவாடப்பட்டுள்ளன..

இதேவேளை இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக அல்வாய் வடக்கைச் சேர்ந்த நபர் ஒருவரையும் மற்றுமொரு நபரான பாடசாலைக்கு அருகாமையில் வசித்து வருபவரையும் சந்தேகத்தின் பேரில் பருத்தித்துறை பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் இரு சந்தேக நபர்களும் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதவான் நீதிமன்ற நீதவான் ஜோய் மகிழ் மகாதேவா இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (2-24)

# 16 ஓவர்கள் கொண்ட சுப்பர் சவால் கிண்ணப்போட்டியில் மாலுசந்தி மைக்கல் அணிசம்பியன்

(கரவெட்டி)



சுப்பர் சவால் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டியில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த 28 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்ற 16 ஓவர்கள் கொண்ட இவ் இறுதிப் போட்டியில் கரவெட்டி ஐங்கரா வி.கழகத்தை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மைக்கல் அணித்தலைவர் தர்சன் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கினார். இதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 15.2 பந்துகளில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிதானமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியவர்களான தர்சன் , பிரசாந் , ராகுலன் முறையே 24 , 19,12 ஆகிய ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

ஐங்கரா அணி பந்துவீச்சின் சார்பில் ரகு-2 , பிரசாந் , ரமேஸ் தலா -2 , ஜெனா ஒரு விக்கட்டுகளை வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஐங்கரா அணி இறுதி பந்து வரை போராடி ஒரு ஓட்டங்களினால் தோல்வி அடைந்தது.

ஐங்கரா அணி 16 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கோகுலன் , ரமேஸ் தலா 22 , ஜீவன், ரகு ஆகியோர் முறையே 19,10 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

மைக்கல் அணி சார்பில் வேணுகானன் , தர்சன் ஆகியோர் முறையே 3,2 உம் அச்சுதன் தலா 1 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்.

இறுதியில் ஒரு ஓட்டங்களினால் வெற்றி பெற்று சுப்பர் சவால் கிண்ணத்தை மைக்கல் அணி கைப்பற்றியது. (2-24)

# அபிவிருத்தி உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்

(அல்வாய்)

வடமாகாண கல்விப்பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய, வடமராட்சி வலய பாடசாலைகளில் காலை உணவு வழங்குவதை மேற்பார்வை செய்வதற்கான அபிவிருத்தி உதவியாளர்களாக ஒருவருட காலத்திற்கு சேவையாற்றும் முகமாக இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் .

இதற்கமைய பருத்தித்துறை கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளை மேற்பார்வை செய்வதற்கு புலோலி மெ.மி.த .க பாடசாலை ஆசிரியர் அ.அனிதன் மற்றும் கரவெட்டி கோட்டத்திலுள்ள பாடசாலைகளை மேற்பார்வை செய்வதற்கு வடஇந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் எஸ்.கணேசலிங்கம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஆசிரியர்கள் தங்களது கடமைப் பொறுப்புப் பட்டியலை உடனடியாக பெற்று தங்களது கடமையை செய்ய வேண்டும் எனவும் இவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள கல்விக் கோட்டங்களில் கடமைக்கான அறிக்கையினை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டும் என்று வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (6-4-19)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com

Learn French the French Way French Classes

"ALLIANCE FRANCAISE DE JAFFNA" பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட வடக்கில் உள்ள பிரெஞ்சு மொழி பயிலுவதற்கான ஒரே ஒரு கலாசார மையமாகும்.

கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் French Embassy இன் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றது.

மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் எமது நூலகத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்...

*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*

*வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.*

(2852)

மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.



# பொருளியற் பாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் 2010 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பொருளியல் பாடக் கருத்தரங்கு, நாளை ஞாயிற்றுக்கழமை காலை 8.30 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். லயன்ஸ் கழகத் தலைவரும் வித்தியாலய அதிபருமான லயன் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பொருளியல் பாட ஆசிரியர் வே. கருணாகரன் கருத் துரை வழங்கவுள்ளார்.

இக் கருத்தரங்கில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பங்குபற்றிப் பயனடையுமாறு லயன்ஸ் கழகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (6-4)

கிறிஸ்தவ உதவி நிறுவன நிதி அனுசரணையுடன் சொண்ட் நிறுவனத்தால் 26 மீள்குடியமர்ந்த பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெற்றது. இதில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் கி.கிருபைநாதன் உரையாற்றுவதையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் கமல் தோழர் பயனாளி ஒருவருக்கு தையல் இயந்திரம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# வன்னியில் சிங்களப் பெயர்கள்; ஒற்றுமை எப்படி ஏற்படமுடியும்?

# பூர்வீகத் தமிழ்ப் பிரதேசங்களுக்கு சிங்களப் பெயர் சூட்டுவது நியாயமா?




தற்போதைய கிளிநொச்சியில் ஒரு சாப்பாட்டுக்கடை

கடந்த ஆறுமாத காலத்தினுள் பன்னிரண்டு தடவையாக நான் வன்னி செல்கின்றேன். இக்காலகட்டத்தினுள் ஏ-9 பாதையின் இரு புறத்திலும் பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்றுள்ளது. வீதியோரத்தின் இருபுறத்திலும் யுத்தத்தில் பலியான படையினரின் நினைவுத் தூபிகள் அமைக்கப்பட்டு வருவதுடன், இதே பூமியில் சில காலங்களுக்கு முன் இறந்த விடுதலைப் புலி உறுப்பினர்களினதும், பொதுமக்களினதும் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபிகள் இடித்தளிக்கப்பட்டிருந்தன.

ஒட்டிசுட்டானில் அமைக்கப்பட்ட படையினரின் உணவகங்கள் ஏ-9 பாதையில் பயணிப்போரின் தேவைகளை நிறைவுசெய்வதாக இருந்தது. குளிர்சாதனப் பெட்டிகள், பொருத்தப்பட்டு அமைக்கப்பட்ட உணவகங்களுடன் ஒப்பிடும்போது சாதாரண தரத்தில் அமைக்கப்பட்டிருந்த தேநீர்க்கடைகளில் ஒரு தேநீர்க் கோப்பையினைக் கூட விற்பனை செய்வதில் இருந்த கஷ்டத்தினை என்னால் காணக் கூடியதாக இருந்தது.

நாட்டின் பெரும்பான்மையானோர் பௌத்தர்களாக இருப்பதனால், விகாரைகளை அமைப்பதற்காக இந்துக் கோவில்களின் சிலைகள் பாதையின் இரு ஓரத்தையும் விட்டு வெகுதொலைவில் போவதை நான் உணர்ந்தேன். நான் சற்றுத் தூரம் பயணித்தபோது மாங்குளம் , முல்லைத்தீவு பாதையில் அலி ஹந்தியினை சந்தித்தேன். சகோதரப் படையினருக்கு இந்த ஊரின் தமிழ்ப் பெயரை வாசிப்பது கஷ்டமாக இருந்தமையினால், அதன் பெயரை ஒரு பலகையில் சிங்கள மொழியில் அலி ஹந்தி என்று எழுதி தொங்கவிட்டிருந்தனர். இதனால் சிரமமின்றி ஊரின் பெயரை வாசித்து விளங்கிக்கொண்டேன்.

அதன்பின் நான் பல தமிழ்ப் பிரதேசங்களுக்குச் சென்றேன். இவற்றின் தமிழ்ப் பெயர்கள் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டிருந்ததுடன், இவற்றின் பழைய தமிழ்ப் பெயர்கள், பாதையிலிருந்த சமிக்ஞைகள் வழக்காற்றிலிருந்து சிறிது சிறிதாக அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

2008ற்கு முன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழிருந்து தற்போது படையினரால் கைப்பற்றப்பட்டிருக்கும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரண்டு மாவட்டங்கள் மற்றும் மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களின் வடக்குப் பிரதேசம் என்பன வன்னி மக்களின் நிஜப் பூமிகளாக இருந்தவையாகும்.

2008ஆம் ஆண்டின் முற்பகுதியிலேயே இந்தப் பூமியில் வாழ்ந்த மக்கள் தமது கால்நடைகளுடன் இடம்பெயர்ந்ததுடன் இவர்கள் பல



மாதங்களாக மனிக்பாமில் தங்கியிருந்ததுடன் 2009ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அரச உத்தரவுடன் இவர்களில் ஒரு பகுதியினர் தத்தமது பிரதேசங்களில் மீள்குடியேறினர். ஒரு பகுதியினர் தமது உறவினர்களு டன் நாட்டின் வெவ்வேறு பகுதிக ளில் வசித்து வருகின்றனர். இன்னும் சிலர் எங்கென்று குறிப்பிட்டுக் கூற முடியாத இடங்களில் தமது உறவுகளுடன் வாழ்கின்றனர்.

இது இவ்வாறிருக்க, அரசு ஒரு பகுதியினருக்கு தமது சொந்தக் கிராமத்திற்கு செல்வதற்கு இன்னும் அனுமதி வழங்கவில்லை. தாங்கள் கஷ்டப்பட்டு சேர்த்த தமது சொத்துக்களை தாங்கள் மீள்குடியேறிய போது இம்மக்களால் தமது கிராமத்தில் காணமுடியவில்லை. யுத்தம் இவர்களது சொத்துக்களை சின்னாபின்னமாக்கியதுடன், இவர்களுள் பலர் 15 தடவைகளுக்கும் மேலாக இடம்பெயர்ந்துள்ளனர்.

இன்று இவ்வாறு இடம்பெயர்ந்து உயிர் வாழும் இவர்கள் அன்று தமது தாய், தந்தை மற்றும் சகோதரர்களின் பிணங்களின் மேல் பாய்ந்து உயிர் தப்பி பிழைத்தவர்களாவர். இவர்கள் மிகவும் ஏழை, கஷ்டப்படும் பொது மக்கள் என்பதுடன் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் குடும்பத்திற்கு ரூபா.15000 என்ற ரீதியில் வழங்கப்பட்ட பணத்தொகையினை பெற்றுக் கொண்டு தமது கிராமத்திற்கு இவர்கள் மீள்குடியேற்றும் நோக்கத்துடன் செல்கின்றனர்.

மண்வெட்டிகூட இல்லாத நிலையில் தமது வயல்களில் இவர்கள் அன்றாடத் தொழில்களை ஆரம்பித்ததை என்னால் காணக்கூடியதாக இருந்தது. இலங்கையில் கடலுக்குச் செல்ல அனுமதி இருந்தபோதிலும் படகுகள், வலை போன்ற அடிப்படை வசதிகளற்ற நிலையில் கடலைப் பார்த்த படி மண் தரையில் உட்கார்ந்திருந்த மீனவர்கள் பலரையும் நான் கண்டேன். இங்கிருந்த 300க்கும் மேற்பட்ட மீனவர்களுக்கு 03 படகுகள் மாத்திரமே காணப்பட்டது.

தேவன்பிட்டி கிறிஸ்தவ தேவாலயமொன்றினுள் பாடம் கற்றுக்கொண்டிருந்த மாணவர் குழாமொன்றினை நான் அவதானித்தேன். இவர்களுக்கு கல்வி கற்பதற்கு பாடசாலை இல்லையென்பதுடன் உட்காருவதற்கு கதிரைகள் கூட இல்லாத நிலையில் தமது உரிமைகளில் ஒன்றான கல்வியினை பெறுவதற்கு இத் தேவாலயத்தில் குழுமியிருந்தனர். பொதுத் தேர்தல் காலத்தில் தமது வாக்குகளை பதிவு செய்வதற்காக ஒட்டிசுட்டான் பிரதேசத்தில் பாதையோரமாக மூன்று மணித்தியாலத்திற்கும் மேலாக பஸ் வரும்வரை மிக நீண்டநேரம் காத்திருந்த பலரையும் கண்டதுடன் அவர்களுள் வயோதிபப் பெண் ஒருவரையும் மிகவும் தளர்ந்த நிலையில் கண்டேன்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் வசிக்கும் தமது மக்களுக்காக சமயச் சடங்கொன்றினை ஆற்றுவதற்காக சென்ற குருவானவர், அரசின் பாதுகாப்பு அமைச்சின் விஷேட அனுமதிப் பத் திரம் இல்லாத நிலையில் குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லமுடியாது திரும்பிச் சென்றதையும் என்னால் காணக் கூடியதாக இருந்தது. இவருடன் தனது உறவினர்களை சந்திப்பதற்காக தெற்கிலிருந்து சென்ற சிலரும் தமது எதிர்பார்ப்பு நிறைவேறாத நிலையில் திரும்பி வருவதை நான் கண்டேன்.

**குளோபல் தமிழ் நியூஸ் நெற்**

அரசு யுத்தம் நிறைவுற்றதை உத்தியோகபூர்வமாக அறிவித்து ஒரு வருடம் பூர்த்தியாகி விட்டது. 30 வருடத்திற்கும் மேலாக விடுதலைப் புலிகள் மற்றும் அரச படைகளிடமிருந்து சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்த இந்த வன்னித் தமிழ் மக்கள், படையினரால் நசுக்கப்பட்டனரென்று யாரும் கூறாவிடினும் ஆங்காங்கே காணப்படும் படை முகாம்களையும், பதுங்கு குழிகளையும் கண்டவுடன் இம் மக்கள் மத்தியில் எழும் பீதி சில விடயங்களைத் தெளிவு படுத்துகின்றது.

தமது சகோதரர்களை, பெற்றோர்களை மற்றும் உறவுகளை பலி கொண்ட இந்தக் கொடிய யுத்தத்தை நடாத்திய படையினர் அவர்களது நினைவுத் தூபிகளை, உணவகங்களை, சிங்களப் பெயர்ப்பலகைகளை அமைப்பதுபோன்ற செயற்பாடுகளின் மூலம் இத் தமிழ் மக்களிடமிருந்து இனங்களுக்கிடையிலான ஒற்றுமையினை எதிர்பார்ப்பது சாதாரணமா? ஏற்பட்ட இந்த மகா அழிவின் சிதறல்களை கூட்டித் துடைத்துவிட்டு இம் மக்களுக்கு கைகொடுக்க தெற்கிலிருக்கும் உங்களால் முடியுமா?

**றுக்கி பெர்ணாண்டோ**





அளவெட்டி கணேஸ்வரம் கிணற்றடி விநாயகர் ஆலய தேர்த்திருவிழாவில் உற்சவமூர்த்தி தேரில் ஆரோகணிப்பதையும் அடியார்கள் அங்கப்பிரதட்ஷணம் செய்வதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கதிரவேலு)

## இந்துசாதனம் வெளிவந்துள்ளது


சைவபரிபாலன சபையினால் மாதந் தோறும் வெளியிடப்படும் 'இந்துசாதனம்' ஆன்மீக சஞ்சிகையின் ஆடிமாத மாத மலர் வெளிந்துள்ளது.

இச்சஞ்சிகை சைவசித்தாந்தம், சங்காபி ஷேகம் ஆலயங்களும் இலக்கிய வளர்ச்சியும் சமயம் ஒருவாழ்வியல், அன்பே நல்வாழ்க் கையின் ஆதாரசுருதி உள்ளிட்ட பல விடயங் களுடன் வெளிவந்துள்ளது. (6-4)

## பாரிய விண்கல்லினால் பூமிக்கு பேராபத்து !

பிரமாண்டமான விண்கல்லொன்று 2182 ஆம் ஆண்டு பூமியுடன் மோதவுள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளார் கள்.

1999RQ36 எனப் பெயரிடப்பட்டி ருக்கும் இவ் விண்கல் பூமியுடன் மோதுவதற் கான சந்தர்ப்பம் 1000 இல் ஒன்று என்ற நிகழ்தகவில் காணப் படுவதாக வும் அவ் விஞ்ஞா னிகள் மேலும்குறிப் பிட்டிருக் கின்ற னர்.



1999 RQ36 விண்கல்லானது 2182 ஆம் ஆண்டு செப்ரெம் பர் 24 ஆம் திகதி பூமியு டன் மோதுவதற் காக சாத்தியக் கூறு கள் அதிகமாகவே காணப்படுவ தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1800 அடிநீளமான இந்த விண்கல் பூமி யுடன் மோதுண்டால் பாரிய அழிவு களை சந்திக்கநேரிடும். மெக்ஸிக்கோவின் Chicxulub கிடங்கினை உருவாக்கிய விண்கல் மோதலானது பூமியில் பாரிய சுனாமி போன்ற அனர்த்தத்தினை ஏற்படுத் தியிருக்கும்.

அந்த விண்கல் மோதல் தான் டைனோ ஸர் போன்ற விலங்கினங் களின் அழிவுக் கும் காரணமாக அமைந் திருந்தது. அதை விட பாரிய அழிவினை 1999 RQ36 விண் கல் ஏற்படுத்தலாம் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

விண்கற்கள் சூரிய சக்தி யினை உள்வாங்கி மீண்டும் அந்த சக்தியை கதிர்ப்பு செய்தால் விண்கற்களில் பாதைகள் மாறுவதற் கான சாத்தியக்கூறுகளும் இருக் கின்றன எனவும் விஞ்ஞானிகள் ஆறுதல் கூறுகின் றனர்.

எது எப்படியிருப்பினும் இந்த பாரிய விண்கல்லானது தற்பொழுது பூமியின் பின்னால் இருப்பதால் 2011 ஆம் ஆண்டு வரை காத்திருக்கவேண்டியிருக்கிறது. அப் பொழுதுதான் அதனை விஞ்ஞானிக ளால் அவதானிக்க முடியுமாம்.

1999RQ36 விண்கல்லின் பாதையி னை மாற்றவேண்டுமானால் 100 வருடங்க ளுக்கு முன்பாகவே அதற்கான வேலைத் திட்டங்களை ஆரம்பிக்கவேண்டும்.

ஆகையினால் அணுகுண்டுகளை காவிச் செல்லும் விமானங்களைப் பயன்ப டுத்துவது தொடர் பாகவும் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். (ச-5)

## வாகன நெரிசல் காரணமாக வருடாந்தம் 32 பில்லியன் ரூபாய் நட்டம்

### பேராசிரியர் அமால் எஸ்.குமாரகே தெரிவிப்பு

(கொழும்பு)

வாகன நெரிசல் காரணமாக வருடாந்தம் 32 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாக பேராசிரியர் அமால் எஸ்.குமாரகே சுட்டிக்காட் டியுள்ளார்.

வாகன நெரிசலினால் ஏற்படக்கூடிய இழப்புக்கள் தொடர்பில் மொறட்டுவ பல்க லைக்கழகத்தின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவு நடத்திய ஆய்வின் மூலம் இந்தத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மேலும் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதியில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளதுடன் பொதுப் போக்குவரத்தில் காணப்படும் குறைபாடுகள், நகரப் போக்குவரத்து ஏற்பாடுகளில் காண ப்படும் குறைபாடுகள் ஆகியவற்றினால் பெருந்தொகைப் பணம் இழக்கப்படுவதாக வும் குறிப்பிடப்படுகிறது.

வாகன நெரிசல் காரணமாக வருடாந் தம் மொத்த தேசிய உற்பத்தியில் 1.5 வீத இழப்பு ஏற்படுவதாகவும் பேராசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதில் மேம்பாலங்கள் மற்றும் பெருந் தெருக்களின் மூலம் இந்த நிலைமை ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சிலவேளை களில் இவ்வாறான மேம்பாலங்கள் மற்றும் பெருந்தெருக்களினால் போக்குவரத்து மேலும் சிக்கலுக்கு உள்ளாவதாகவும் தெரி வித்துள்ளார். (6)

## கடலில் மூழ்கும் அபாய நிலையிலிருந்து இலங்கையர்கள் காப்பாற்றப்பட்டனர்

(கொழும்பு)

கடலில் மூழ்கும் அபாய நிலை யில் இருந்த இலங்கை அகதிகள் உள்ளிட்ட 81 பேர், அவுஸ்திரே லியாவின் வடமேற்கு கிறிஸ்மஸ் தீவுக் கடற்பரப்பில் வைத்து, கடந்த 28 ஆம் திகதி கடற்படையினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் சேர்த்து, அவர் களை அவுஸ்திரேலியாவுக்கு கடத் திய நான்கு இந்தோனேசிய ஆட் கடத்தல்காரர்களும் காப்பாற்றப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் தொழி லாளர் கட்சி தெரிவானதைத் தொடர் ந்து, அங்கு சென்ற 150 ஆவது படகாக கடந்த 28 ஆம்திகதி சென்ற படகு பதிவாகியுள்ளது.

இதற்கிடையில், கடந்த 28 ஆம்திகதி கைது செய்யப்பட்ட நான்கு ஆட்கடத்தல்காரர்களும், குற்றவா ளிகளாக கருதப்படமாட்டார்கள் எனத்தெரிவிக்கப்படுவதோடு,

அவர்கள் நான்கு பேரும், ஏனைய அகதிகளுடன் ஆபத்தான நிலையில் இருந்து காப்பாற்றப் பட்டதைத் தொடர்ந்து அவர்கள் காப்பற்றப்பட்ட கடற்பயணிகள் எனக் கருதப்படுவரே தவிர, சட்டவிரோதக் குடியேறிகள் எனக் கருதப்படமாட் டார்கள் என அவுஸ்திரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கப்பல் மூழ்கும் நிலை யில் இருந்ததாக கடற்படையின ருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் மீட்கப்பட்டுள் ளனர்.

எனினும் அது மூழ்கிய நிலை யில் இருக்கவில்லை என ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே இது ஆட்கடத் தல்காரர்களின் சூழ்ச் சியாக இருக் கலாம் எனத் தெரி விக்கப்படு கிறது.

இந்த வேளையில், அண்மை யில் பிரதமர் ஜூலியா கில்லாட்டின் நடவடிக்கை தொடர்பில் தகவல் வெளியிட்டிருந்த கருத்து முக்கிய மானதாக நோக்கப்படுகிறது. அவுஸ் திரேலியா சட்டவிரோத குடியேறி களை தடுக்க நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ளும் அதேநேரம் அதற்கு ஏற்ப கடத்தல்காரர்களும் தமது சூழ்ச்சிகளை மாற்றிக் கொள் வர் என்பதுவே அந்த கருத்தாகும்.

இதேவேளை, அங்கு அவுஸ் திரேலியாவில் மீட்கப்பட்ட அகதிக ளுக்கு, அது தொடர்பிலான தகவல் களை ஊடகங்களுக்கு வழங்கும் பட்சத்தில், அவர்கள் சிறை வைக் கப்படுவர் என இராணுவத்தினர் உத்தரவு பிறப்பித்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

இதற்கிடையில் மீட்கப்பட்ட அகதிகளில் அதிக அளவிலானவர் கள் இலங்கையர்கள் எனவும், பெரும் பாலும் அவர்கள் 18 தொடக்கம் 50 வயதுடைய ஆண்கள் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவுஸ்திரே லிய பிரதமர் ஜூலியா கில்லார்ட், தமக்கு அகதிகளின் படகுகளை நிறுத்தும் எண்ணம் இல்லை எனவும், அவர்கள் தமது நாடுகளில் இருந்து வெளியேறாமல் தடுப்பதே தமது எண்ணம் எனவும் தெரிவித் துள்ளார்.

இதற்காக பிராந்திய ஒத்துழைப் பினை தாம் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6-2)


அவசியம் வருக "ஜெய்குருதேவ்" ஆனந்தம் பெறுக



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்
அவர்களின்

THE ART OF LIVING

வாழும் கலையின் ஒருநாள் திருவிழா

பயிற்சி எடுத்தவர்களுக்கான நினைவூட்டல் பயிலரங்கு

இடம்:- திவ்ய ஜீவன சங்க மண்டபம் - நல்லூர் (சட்டநாதர் சிவன் கோவில் அருகில்)

காலம்:- 01.08.2010 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்:- காலை 8.50 மணிமுதல் மாலை 4.45 மணிவரை

மதிய உணவு வழங்கப்படும். அன்பளிப்பு-200/-

முன்பதிவுகளுக்கு முந்துங்கள்

புதிய பயிற்சி ஆரம்பம்

இடம்:-இந்துசமய பேரவை -கந்தர்மடம்

காலம்:-02.08.2010 (திங்கட்கிழமை) முதல் 07.08.2010 (சனிக்கிழமை) வரை

அணி 1:- காலை 6.00 மணி - 8.30 மணிவரை

அணி 2:- காலை 10.00 மணி- பிற்பகல் 12.30 மணிவரை

அணி 3:- பிற்பகல் 2.30 மணி -4.45 மணிவரை

(அ)

T.P.: 0770474757

# வள்ளலாரின் சமுதாயச் சிந்தனைகள்

2

“நீர் உண்டு பொழிகின்ற கார் உண்டு விளைகின்ற நிலம் உண்டு பலனும் உண்டு நிதி உண்டு துதி உண்டு மதி உண்டு கதி கொண்ட நெறி உண்டு நிலையும் உண்டு.

ஊர் உண்டு பேர் உண்டு மணி உண்டு பணி உண்டு உடை உண்டு கொடையும் உண்டு.

உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தும் உறும் உளம் உண்டு வளமும் உண்டு”



என்றுபதிகத்தில் அவர் குறிப்பிடுவார். பணத்திலே சிறிதும் ஆசை தமக்கு இல்லையென்று அவர் ஒப்புக் கொண்டாலும் மற்றவர்கள் வாழ்வு சிறக்கப் பணம் வேண்டும் என்பதையும் அவர் உணராமல் இல்லை. “ஏசும்பிறர்மனையில் ஏங்க அவர் ஈயுமரைக் காசும் பெறவிரிக்கும் கைகள்” காசில்லாமையால் வாட்டம் கொண்ட மக்கள் நாளும் வருந்தி ஊர்விட்டு ஊர்குடிபெயர்ந்தமையை அவர் காணத் தவறவில்லை.

“சோடில்லை மேல் வெள்ளைச் சொக்காயில்லை நல்ல சோமனில்லை பாடில்லை கையிற்பணமில்லை” எனத்தம்மைப்பற்றிக்கூட ஓர்இடத்தில் வள்ளலார் பெருமான் எழுதுவார். தாம்மேற்கொண்ட தருமச்சாலைப் பணி முடிக்கப் பணம் தேவையெனத் தம் நண்பர்களுக்குத் திருமுகங்கள் வழிக்கூடத் தெரிவித்திருக்கின்றார்.

**கல்விக்கண்**

நாட்டில் உள்ளமக்கள் அனைவருக்கும் கல்வி பொதுவாக்கப்பட வேண்டும். சாகாக் கல்வி பற்றி அறியவேண்டும். சந்தைப்படிப்பில்லாத சொந்தப்படிப்பு வேண்டும்.

“சதுர்மறை ஆகம் சாத்திரம் எல்லாம் சந்தைப் படிப்பு நம் சொந்தப்படிப்போ?” என வள்ளலார் பெருமான் வினவுவார். முன்மனத்தகத்தே எழுகின்ற ஐயப்பாடுகளையெல்லாம் அகற்றி முழு இன்பம் தரத்தக்க கல்வியை ஆண், பெண் அனைவரும் கற்க வேண்டும். இவ்வாறு மனித நேயக் கல்வியை, மனிதனை மனிதனாக்கும் கல்வியைக் கற்றுத் தருவதற்காகவே சமரசவேத பாடசாலை ஒன்றை நிறுவ வள்ளலார் பெருமான் எண்ணியிருந்தார்.

இக் கல்வி அன்னை மொழியாகிய தமிழ் மொழி வழிக் கற்பிக்கப்படுதல் இன்றியமையாதது. இதனை உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை என்னும் திங்களிதழில் “தமிழ் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளால் எழுதப்பட்டது” என்னும் தலைப்பில் காட்டுவார்.

சிந்திக்கும் ஆற்றலைத் தமிழ் மொழியே மிக எளிதாகத் தரத்தக்கதாகையால் தமிழ் மொழி வழியே கற்கலாம். தாய்மொழியைப் புறக்கணிக்காத சமுதாயம் உயர்வடையும். அதே போல் பிறமொழிகளையும் மதிக்கக் கற்றுக்கொள்ளும் சமுதாயமும் செழுமையடையும் என்பார்.

**ஒளி வழிபாடு**

கடவுள் ஒருவரேஅவர் அருட் பெருஞ் சோதியினர் என்று ஒளிவழிபாட்டை ஏற்றுக் கொள்ளக் கூடிய அனைவராலும் விளங்கிக் கொள்ளக் கூடியதாகக் கூறுவார். “ஒன்றுமலார் இரண்டு மலார் ஒன்றிரண்டும் ஆனால் உருவும் அலார் அருவும் அலார்

உரு அருவும் தமக்கோர் அன்றும் உளார் இன்றும் உளார் என்றுமுளார் தமக்கோர் ஆதியிலார் அந்தமிலார் அருட் பெருஞ்சோதியினார்” என்று ‘திருச்சிற்றம்பலத்துத் தெய்வமணி மாலையில் குறித்துக் காட்டுவார். திருவருளாம் பெருஞ்சோதி என்றும் அருட்சோதித் தெய்வம் என்றும் சொல்லிச் சன்மார்க்கச் சமுதாயம் அமையம் அமைய விரும்பும் தமது விருப்பத்தைத் தெரிவிப்பார்.

ஒளிவழிபாட்டை விளக்க அமைத்த “சத்திய ஞானசபை” 25.01.1872ல் நிறுவப்பட்டது. சத்திய ஞானசபையை அனைவரும் காணும்படியாக அமைத்துப்பின்னர் ஒவ்வொருவர் உள்ளம் தான் திருச்சேர் ஒளிக் கோயில் சபையாக மாற வேண்டுமென்பதை வள்ளலார் பெருமான் “சத்தியஞானசபையென்றுட் கண்டனன்” என்பார்.

**பெண்ணின்பெருமை**

வள்ளலார் பெருமான் விரும்பிய சமத்துவ சமரச சமுதாயம் உருவாக உலகின் செம்பகுதி இனமாகிய பெண்கள் உரிமையோடு வாழ வேண்டும். வள்ளலார் பெருமான் வாழ்ந்த காலம் இத்தகு சிந்தனை கூடத் தவறு என்று வாதிட்ட காலமாகும். பெண்ணைத் தெய்வமென ஒருபுறம் போற்றினாலும் மற்றொருபுறம் இழிவெனக் கருதினர். ஆணுக்குப் பெண் அடிமையாகத் தான் வாழ வேண்டும் என்றனர். இக்கருத்தில் வள்ளலார் பெருமானுக்கு உடன்பாடில்லை என்பது தெளிவாகிறது.

ஆண்மைக்குள் பெண்மையும் பெண்மைக்குள் ஆண்மையும் ஒன்றுபட்டுக்கலந்திருக்கிறது.

“பெண்ணினுள் ஆணும் ஆணினுள் பெண்ணும் அண்ணுற வகுத்த அருட் பெருஞ் சோதி” என்று அருட்பெருஞ்சோதி அகவலில் தெளிவுபடுத்தியுள்ளார். பெண்ணின் மனமும் ஆணின்அறிவும் ஒன்றுபடும் போது உலகம் உயர்வடையுமென்பது அவரது கருத்து. “தெய்வம் தொழா அள்” என்னும் தேவர் குறளால் இதை அறிக என உரைநடையில் வள்ளலார் பெருமான் எழுதுவார்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் உணர்வுகளும் உறவுகளும் சம அளவில் இருப்பதால் அவர்களைத் தாழ்வாக எண்ண வேண்டுவதில்லை. “மனைவியை இழந்த கணவன் வேறு கல்யாணப் பிரயத்தனம் செய்ய வேண்டா” என்றும், “புருஷன் இறந்தால் மனைவி தாலி வாங்குதல் வேண்டா” என்றும் கூறுவார். வள்ளலார் பெருமானின் புதிய புரட்சிச் சிந்தனை சமுதாய உயர்வுக்கு ஊற்றாக அமையும். (முற்றும்)

செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

பேராசிரியர்
டாக்டர்சு.சிவகாமசுந்தரி

# வெலிக்கந்தை புனர்வாழ்வு முகாமிலுள்ளோரை உறவினர்கள் பார்வையிடுவதற்கு ஜே.வி.பி.ஏற்பாடு

(கொழும்பு)

வெலிக்கந்தைப் புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பெற்று வரும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை அவர்களது உறவினர்கள் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ள ஜே.வி.பி கட்சி இன்று அவர்களை அங்கு அழைத்துச் செல்லவுள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்ததாவது,

எமது கட்சித் தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமையில் நாம் அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்தபோது அங்குள்ள மக்கள் வெலிக்கந்தை புனர்வாழ்வு முகாமிலுள்ள தமது உறவினர்களைப் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு எம்மிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதையடுத்தே நாம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இன்று அவர்களை அங்கு அழைத்துச் செல்லவுள்ளோம்.

கிளிநொச்சியில் அரசாங்கம் மீள்குடியேற்றம் செய்துள்ளதாகக் கூறுகின்றது. ஆனால் அங்குள்ள மக்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தகரத்தையும் தடிகளையும் கொண்டு கொட்டில் அமைத்து வாழ்கின்றனர். எமது கிளிநொச்சி விஜயத்தின் போது அரசின் மீள்குடியேற்றம் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை நாம் தெரிந்து கொண்டோம்.

இதேவேளை புனர்வாழ்வு முகாமிலுள்ளவர்களை சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிட முடியும். கிளிநொச்சியிலிருந்து வெலிக்கந்தைக்கு அவர்கள் தமது உறவுகளைப் பார்வையிட வருவதாயின் பொருட்கள் மற்றும் பயணச் செலவுக்காக குறைந்த பட்சம் 5 ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவாகும். அவர்களிடம் போதிய வசதியின்மையினால் போக்குவரத்து வசதியினை ஒழுங்கு செய்து தருமாறு எம்மிடம் கோரினர்.

இதற்கமையவே இன்று அங்குள்ள மக்களை அழைத்துச் செல்லவுள்ளோம். இந்தச் சேவையை மாதம் தோறும் வழங்கவுள்ளோம் என்று தெரிவித்தார். (6-2)

# முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் முன்பள்ளியின் விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு திருக்குடும்ப கன்னியர் மட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி நவநீதம் ஜெகதீசன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். மாநகரசபையின் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் கலந்துகொள்ளவுள்ளார். (4)

# வெலிக்கடைச் சிறைச்சாலையில் போதைப்பொருள் வர்த்தகம்


(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் பெருமளவு போதைப்பொருள் வர்த்தம் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளொன்றுக்கு ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டளவு போதைப் பொருட்கள் கை மாற்றப்படுவதாகவும் இவை பெண்கள் பிரி வில் நடைபெறுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

மரண தண்டனை அனுபவித்து வரும் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் மனைவியினால் இந்தப் போதைப் பொருள் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வார இறுதி நாட்களில் அதிகளவு சட்ட விரோத போதைப்பொருள் வர்த்தகம் இடம் பெற்று வருவதாகவும் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் பெண் கைதிகளிடம் கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பல்வேறு சட்ட விரோதப் பொருட்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-2)








DFCC வங்கியின் லீசிங் திட்டத்தின்கீழ் புதிய (TATA) கன்ரர் வாகனம் கையளிக்கும் நிகழ்வில் வங்கி முகாமையாளர் வாகன உரிமையாளரிடம் திறப்பை கையளிப்பதையும் வங்கியின் கொடுகடன் உத்தியோகத்தர்கள் உரிமையாளர்களையும் படங்களில் காணலாம்.

# வெங்காயத்தில் பீடைகளும் அவற்றினது முகாமைத்துவமும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...


11-VII



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### வெங்காயத்தில் கபில கொப்புளங்கள் (Onion purple blotch)

எங்களூர் வெங்காயச் செய்கையில் வரலாறு படைத்தது மட்டுமல்லாது ,வரலாறு கண்ட ஊரும் கூட. வெங்காயச் செய்கை என்பது எங்களூர் கமக்காரர்களுக்கு அத்துப்படி ஆண்டாண்டு காலமாக ஏதோ ஒரு இடைவெளியில் வெங்காயத்தை நடவு செய்து இழந்த முதலை விரைந்து சமன் செய்யும் கைங்கரியம் எங்களூர் விவசாயத்தின் சிறப்பு. துலா மிதித்து செய்த வெங்காயச் செய்கையின் மகிமையும் எம்மவரினது இன்னொரு சிறப்பு. இவ்வளவிற்கு கை தேர்ந்த விவசாய விற்பன்னர்களையும் ஒரு கலக்கு கலக்கியிருக்கின்றன அண்மையில் வெங்காயப் பயிரில் ஏற்பட்ட நோய்கள். வெங்காயச் செய்கை மன்னர்களையே திக்கு முக்காட வைத்திருக்கிறது என்றால் பாருங்களேன்.



இதற்கு முதல் இத் தொடரில் நாம் ஆராய்ந்த வெங்காயப் பயிரில் சேதத்தை ஏற்படுத்தும் நோய்களுடன் கபில கொப்புளங்களும் ஒரு வகையானதாகும். வெங்காயத்தாள்களில் கொப்புளங்கள் போல தோற்றமளிக்கும் இந்நோய் இன்னும் ஒரு வகை பூஞ்சணத்தினாலேயே தோற்றுவிக்கப்படுகின்றது. இதுவுமொரு மண்வாழ் பூஞ்சணம். இதனை நோயியலாளர்கள் ஒல்ரனோியா போரி (Alternaria pori) என்னும் பெயர் கொண்டழைப்பர். அநேகமாக வெங்காயப் பயிரினது தரைக்கு மேலான அனைத்துப் பகுதிகளையும் பாதிக்கும் இப் பூஞ்சணம் நோய் முற்றிய நிலையில் குமிழையும் பாதிப்பதாக அறிய முடிகின்றது.

#### நோயின் அறிகுறிகள்

கபில கொப்புளங்கள் எனப்படுவது நோய் முற்றிய நிலையிலுள்ள தோற்றமாகும். ஆரம்பத்தில் முற்றிய வெங்காயத் தாள்களிலேயே நோயின் அறிகுறிகள் தென்படும். முதிர்ந்த வெங்காயத் தாள்களில் இப் பூஞ்சணத் தொற்று இலகுவாக ஏற்பட்டுவிடும். ஆரம்பத்தில் நோயின் தாக்கம் பெரிதாக இருக்காது. ஆதலினால் இந் நோய்த் தொற்றிற்கு உங்களுடைய வெங்காயப் பயிர் உட்பட்டு விட்டதனை எளிதில் கண்டறிந்துவிட முடியாது. இருப்பினும் வெங்காயப் பயிரோடு வாழ்ந்து சரித்திரமாகிய எங்களூர் விவசாயப் பெருமக்களாகிய நீங்கள் வெங்காயப் பயிரை மிக அவதானமாக கண்காணித்து வந்தால் நோயினறிகுறிகளை மிக எளிதாக காணமுடியும். அனுபவத்தினால் ஆகக் கூடிய விடயங்களுள் இதுவும் ஒன்று. இந்நோயின் தாக்கம்



குறிப்பாக மழைகாலங்களில் அதுவும் தொடர்ச்சியான மழையுடன் சராசரி வளிமண்டல வெப்பநிலையான 77 -81°F இருக்கும் போது அதிகமாக இருக்கும். ஆகக்குறைந்த வெப்பநிலையீல் அதாவது 55 °F இல் நோய்த் தொற்று ஏற்படாது. *ஓங்கியடிக்கும் மழைத்துளியினால் பூஞ்சண வித்திகள் சிதறடிக்கப்படும் போது*



*கபில கொப்புள நோய் விரைந்து பரவுவதுடன் தீவிரமடையவும் செய்யும். வேகமாக வீசும் காற்றினாலும் பூஞ்சண வித்திகள் விளைநிலமெங்கும் பரவ வாய்ப்புண்டு.*

இதில் கவனிக்கவேண்டியது என்னவெனில் நோய்த் தொற்று ஏற்பட்ட வெங்காயப் பயிரின் மீதிகள் விளைநிலத்தில் விடப்படும் போது அதில் பூஞ்சணம் விரைந்து பெருகி பின் பயிர் முழுவதிலுமே தொற்றினை ஏற்படுத்தி விடுகின்றது. ஒருமுறை இந் நோய்த் தாக்கத்திற்குள்ளான விளைநிலத்தில் தொடர்ந்து வெங்காயத்தைப் பயிரிடுவதை தவிர்க்க வேண்டும்.

*நோய் கண்ட வெங்காயச் செய்கை செய்த இடத்தில் வெங்காயம் தவிர்ந்த ஏனைய பயிர்களை பயிர் சுழற்சி என்னும் கோட்பாட்டுக்கிணங்க விளைவிக்கலாம். இங்கே இந்நோயை ஏற்படுத்தும் பூஞ்சணத்திற்கு தேவையான உணவை கிடைப்பதைத் தவிர்ப்பதே அதனை இலகுவில் கட்டுக்கோப்பில் வைத்திருக்க உதவும்.*

#### வெங்காயக் குமிழினூடு பரவும் சாத்தியம் அதிகம்

எனதருமை விவசாயப் பெருமக்களே! அநேகமான நோய்கள் விதை வெங்காயத்தினூடு பரவிடும் சாத்தியம் அதிகம் உண்டென பலமுறை இத்தொடரில் குறிப்பிட்டுள்ளதை கவனத்திற் கொள்க. விதை வெங்காயத் தேர்வு சரியானதாகவும் பின்பு விதை நேர்த்திசெய்யவும் வேண்டும். பிரச்சினையை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தி விடுவது எப்போதுமே நல்லது. ஆதலினால் விதை நேர்த்தி செய்து நடுங்கள். விதை நேர்த்தி என்பது இங்கு தற்பாதுகாப்பிற்காக செய்வது ஆகும். இதுபற்றி முந்தைய பகுதியில் விரிவாக விளக்கியிருக்கின்றேன்.

நோயின் அறிகுறிகள் துலாம்பாரமானவை. ஓரளவிற்கு நீண்டிருக்கும் இலை வெளிறல், நடுவே சிறியதும், குழிவிழுந்தது மான தோற்றத்தைத் தருவதுடன் வெள்ளை கொப்புளப் பகுதியில் நடுவே கபிலநிறமாகஇருக்கும். ஆதலினால் இதனை கபில கொப்புள நோய் என அழைப்பார்கள்.

#### வெங்காய இனங்களில் நோய் பரவுந் திறன்

எங்களூரில் தற்போது அதிகளவில் பயிர் செய்யப்படும் இனங்களுள் ''வேதாளம்'' ரக இனமே அதிகளவில் பயிர் செய்யப் படுகின்றது. பெயரளவில் வேதாளம் என்றாலும் எங்களூர் "பெருத்த" பெரியவர் போல அதில் நோய்களும் அதிகம். உருவம் பெருத்திருக்கிறதேயொழிய நோயெதிர்ப்பு தன்மை மிகவும் குறைவு. வேதாளத்தை தெரிவு பிறப்பாக்கவியல் (Selection) மூலம் விருத்தி செய்து அளவில் பெரிதாக்கியிருக்கின்றோமே தவிர இதற்கு நோயெதிர்ப்பு சக்தி குறைவாகவே இருக்கின்றதனை அவதானியுங்கள்.




#### நோயேற்படுவதனை தவிர்க்க வழியுண்டு

1.விதை வெங்காயத்தை வாங்கும் போது நோய்த் தொற்றுக்குள்ளான வெங்காய விளை நிலத்திலிருந்து பெறப்பட்டதா என அவசியம் தெரிய வேண்டும். வினையை விலை கொடுத்து வாங்கக் கூடாது.

2.விதை வெங்காயத்தை நடவு செய்யும் போது விதை நேர்த்தி செய்தல் அவசியம்.

கபில கொப்புள நோய் ஏற்பட்ட வெங்காய பயிர்விளைந்த நிலத்தில் தொடர்ச்சியாக மூன்று வருடங்களுக்கு வெங்காயச் செய்கை செய்வதனை தவிர்க்கவும். வெங்காயந் தவிர்ந்த ஏனைய பயிர்களை நடவுசெய்யலாம். பயிர்ச்சுழற்சி முறை (Crop rotation) இங்கே அவசியஞ் செய்தேயாக வேண்டும். இதை விடுத்து தொடர்ந்து அதே வெங்காய இனத்தை பயிரிட்டால் இந்நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது கடினம். இந்நோய்க்குரிய பூஞ்சணத்தின் விருத்திக்கு நாமே எமது செய்கைமூலம் அனைத்து உதவிகளையுஞ் செய்துவிட்டுப் பின்னர் நோய் முற்றிய நிலையில் பரிகாரஞ் செய்ய நினைப்பது எந்தப் பலனையுந் தராது.

4. வெங்காயப் பயிர் அறுவடையின் போதும் அதன் பின்வரும் கபில கொப்புள நோயேற்பட்ட வெங்காயப் பயிரின் மீதிகளை அதே விளைநிலத்தில் விடுவதை தவிர்க்க வேண்டும். பயிர் மீதிகளில் தங்கியிருந்து விருத்தியடைந்து பின் வெங்காயம் நடவு செய்யும் போது விரைந்து தொற்றி பயிரை அழித்தே விடும். பயிர் மீதிகளை சேகரித்து எரித்து விடுவது என்றுமே நல்லது.

5. இந்நோய் ஏற்படும் சாத்தியமுள்ள இடங்களில் வெங்காயத்தை நெருக்கமாக நடுவதை தவிர்ப்பது நல்லது. நெருக்கம் நோயை மேலும் தீவிரமாக்கிவிடும்.

6. அதிகளவிலான தழைச்சத்தினை (நைதரசன் பசளைகள் - யூரியா போன்றன) விளைநிலத்திற்கு இடவேண்டாம்.

7. வெங்காயம் முற்றிய நிலையில் அறுவடை செய்வது நல்லது .அரைகுறைப் பதத்தில் அறுவடை செய்தல் இன்னும் அந்த வெங்காயக்குமிழ் அழுகுவதற்கு வழிகோலிவிடும்.

8. வெங்காயத்தை கத்தைகளாக்கி 90-95°F வெப்பநிலையில் உலர்த்த அல்லது உணரவிடவேண்டும்.

9.வெங்காய கத்தைகளை பாதுகாக்கும் போது அந்த அறை வெப்பநிலை 32°F ஆகவும் வளிமண்டல ஈரப்பதன் 70% ஆகவும் இருத்தல் வேண்டும்.

10. இந்நோயை கட்டுப்படுத்த செப்பு பூஞ்சண நாசினிகள் பெரிதும் உதவும். இருப்பினும் நோய் தீவிரமடைந்துள்ள நிலையில் பூஞ்சண நாசினிகளால் எதுவுமே செய்யமுடியாது.

விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட பின்வரும் பூஞ்சண நாசினிகளை பயன்படுத்தலாம்.

a) குளோரோதலோனில் 500g/lit sc - 30 மி.லீ/10 லீ.நீருக்கு

b)குளோரோதலோனில் 75%wp -20 கி/10 லீ.நீருக்கு

c) கொப்பர் 50%wp -40கி/10 லீ.நீருக்கு

d)மான்கோசெப் 80% wp -20கி/10லீ.நீருக்கு

e)மான்கோசெப் 75%wG-20கி/10லீ. நீருக்கு

*ரெபியூகனோசோல் 250g/L EW இனை தெரிவு செய்யும் போது அவதானம் தேவை. லீக்ஸ் பயிருக்கு ஒவ்வாத பூஞ்சண நாசினி இது. வெங்காயத்துடன் லீக்ஸும் பயிரிட்டிருந்தால் ரெபியூகனோசோல் எனும் பூஞ்சண நாசினியை விசிற வேண்டாம். இது லீக்ஸ் பயிரை எரித்துவிடும்.* (தொடரும்)





2010 உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வேலணைப் பிரதேச சபையின் ஆதரவில் புங்குடுதீவு பிரதேச உபஅலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் ச.கணேஸ்வரன், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.மகேந்திரன் மற்றும் பிரதம முகாமைத்துவ உதவியாளர் ஐ.குருசந்திரநாதன் ஆகியோர் வரவேற்கப்படுவதையும் கண்காட்சியைப் பார்வையிடுபவர்களையும் படங்களில் காணலாம்.

## பௌத்த மரபுரிமைகளை பிரதிபலிக்கும் பிரதேசங்களில் வேறு திட்டங்களை முன்னெடுக்க கூடாது

### ஹெல உறுமய கோரிக்கை

பௌத்த கலாசாரத்தை பாதுகாப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜாதிகஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

பௌத்த மரபுரிமைகளை பிரதிபலிக்கும் பிரதேசங்களில் வேறு திட்டங்களை முன்னெடுக்க அனுமதிக்கப்படக் கூடாது எனவும் கோரியுள்ளது.

விடுதி ஒன்றை நிர்மாணம் செய்வதற்காக அறுகம்பை பிரதேசத்தில் பௌத்த விஹாரை ஒன்று இடிக்கப்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

பௌத்த விஹாரை தகர்க்கும் பணிகளை பொலிஸாரே மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பௌத்த கலாசாரத்தைப் பாதுகாப்பதற்காக அடிக்கடி போராட்டங்களை நடத்த முடியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (6-2)

## அரசியல் சாசனத் திருத்தம் குறித்த ஐ.தே.கவின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது

### மனோ கணேசன் தெரிவிப்பு

அரசியல் சாசனத் திருத்தம் குறித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கதென ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் ஏனைய அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு சிறுபான்மை கட்சிகள் மட்டுமன்றி வடக்கு - கிழக்கிற்கு வெளியே உள்ள சிறுபான்மை கட்சிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் ரீதியான இணக்கப்பாடு எட்டப்படாது மேற்கொள்ளப்படும் எந்தவொரு அரசியல் சாசனத் திருத்தமும் பயன்தராது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6-4)

## போர்க்குற்றச் செயல்கள் இடம்பெறவில்லை என்பதனை நிரூபிப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய கட்சி முயற்சி

(கொழும்பு)

இலங்கையில் எவ்விதமான குற்றச் செயல்களும் இடம்பெறவில்லை என்பதனை நிரூபிக்கும் வகையில் ஜாதிகஹெல உறுமயக் கட்சி ஆவணமொன்றை தயாரித்து வெளியிடத் திட்டமிட்டுள்ளது.

போர்க்குற்றச் செயல்கள் இடம்பெறவில்லை என்பதனை வலியுறுத்தும் வகையில் எழுத்து மற்றும் வீடியோ காட்சிகள் அடங்கிய ஆவணங்கள் தயாரிக்கப்படவுள்ளதாக ஜாதிகஹெல உறுமயக்கட்சியின் மேல் மாகாணசபை அமைச்சர் உதயகம் மன்பில தெரிவித்துள்ளார்.

குறித்த ஆவணம் பதினைந்து நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் இரண்டு வாரங்களுக்குள் ஆவணங்கள் தயாரிக்கப்படும் எனவும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் நடவடிக்கைகளை வலுவிழக்கச் செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சும் இந்த ஆவணத்தைத் தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

## எல்லைகளை மீள் நிர்ணயம் செய்வது குறித்து சிறுபான்மை கட்சிகள் பரிந்துரை

(கொழும்பு)

தேர்தல் தொகுதிகள் மற்றும் நீதிமன்ற எல்லைகள் தொடர்பில் மீள் நிர்ணயம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எல்லைகளை மீள் நிர்ணயம் செய்வது குறித்த யோசனைத் திட்டங்களை ஏற்றுக் கொள்ளும் காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் சிறுபான்மை கட்சிகள் பரிந்துரைகளை முன்வைத்துள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக தமிழ் அரசியல் கட்சிகள் ஆகியன யோசனைத் திட்டங்களை முன்வைத்துள்ளன.

கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவு, மாவட்டச் செயலகம் ஆகியவற்றை மீள் நிர்ணயம் செய்வது குறித்த பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (6-2)

## உயிர்பிரியும் தருணத்தில் உடற்பாகங்களை தானம் செய்த தமிழ் இளைஞன்

(கொழும்பு)

உயிர் பிரியும் தருணத்திலும் உடற்பாகங்களை தானம் செய்து இரண்டு பேரின் உயிரைக்காப்பாற்ற தமிழ் இளைஞன் ஒருவன் முன்வந்துள்ளான்.

கண்டியில் மூளை உயி ரிழந்த நிலையில், காணப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவரின் சிறுநீரகங்கள், இரண்டு சிங்கள நோயாளிகளுக்கு பொருத்தப்பட்டுள்ளது.

விபத்து ஒன்றினால் பாதிக்கப்பட்ட குறித்த தமிழ் இளைஞரின் உயிர் பிரிவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர், சிறுநீரகங்களை தானமாக அளித்துள்ளார்.

குறித்த தமிழ் இளைஞரின் தாயார் இந்த ஈகைக்கு இணங்கியுள்ளதாகவும் தனது மகனின் உயிரைக் காப்பாற்ற முடியாது என அறிந்து கொண்ட குறித்த தாய், இவரின் உடற்பாகங்களைப் பயன்படுத்தி இரண்டு உயிர்களை காப்பாற்ற பங்களிப்பு வழங்கியுள்ளார்.

சிறுநீரக அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட இருவரும் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டியைச் சேர்ந்த எம். யோகேந்திரன் என்ற தமிழ் இளைஞரின் சிறுநீரகங்களே இவ்வாறு வேறு நபர்களுக்கு பொருத்தப்பட்டுள்ளது.

யோகேந்திரனின் தாயாரின் நடவடிக்கை சமூகத்தில் ஏனையோருக்கு சிறந்த படிப்பினைகளை புகட்டும் வகையில் அமையப் பெற்றுள்ளதாக சத்திரசிகிச்சையை மேற் கொண்ட டாக்டர் ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார். (6-2)

## 31.07.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 30 BC- மார்க் அந்தனியின் படைகள் ஆகுஸ்டசின் படைகளை வென்றனர். ஆனாலும் பெரும்பாலான அவனது படையினர் அவனை விட்டு விலகியதால் அவன் தற்கொலை செய்து கொண்டான்.
- 1492 - ஸ்பெயினில் இருந்து யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.
- 1498 - தனது மூன்றாவது பயணத்தின் போது கொலம்பஸ் டிரினிடாட் தீவை அடைந்தார்.
- 1588 - ஆங்கிலேயர்களுக்கும் ஸ்பானியர்களுக்கும் இடையில் இடம்பெற்ற முதலாவது கடற்படைச் சமரில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.
- 1655 - ரஷ்யா லித்துவேனியாவின் தலைநகர் வில்னியூசைக் கைப்பற்றி ஆறு ஆண்டுகள் தமது ஆட்சியில் வைத்திருந்தது.
- 1658 - அவுரங்கசீப் இந்தியாவின் முகலாயப் பேரரசின் மன்னர் ஆனார்.
- 1741 - புனித ரோமப் பேரரசன் ஏழாம் சார்ள்ஸ் ஆஸ்திரியா மீது படையெடுத்தான்.
- 1865 - உலகின் முதலாவது குறுகிய அகல தொடரூந்துப் பாதை அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் அமைக்கப்பட்டது.
- 1938 - கிரேக்கம், துருக்கி, ருமேனியா, யுகொஸ்லாவியா ஆகிய நாடுகளுடன் பல்கேரியா அமைதி உடன்பாட்டிற்கு வந்தது.
- 1954 - ஆர்டிடோ டெசியோ என்பவர் தலைமையிலான இத்தாலிய குழு ஒன்று கே-2 கொடுமுடியை எட்டியது.
- 1964 - சந்திரனின் முதலாவது மிகக்கிட்டவான படங்களை ரேஞ்சர் 7 விண்கலம் பூமிக்கு அனுப்பியது.
- 1971 - அப்பலோ 15 விண்வெளி வீரர்கள் லூனார் ரோவர் வண்டியை சந்திரனில் செலுத்தி சாதனை புரிந்தனர்.
- 1976 - வைக்கிங் 1 விண்கலத்தினால் செவ்வாய்க் கோளில் எடுக்கப்பட்ட புகழ்பெற்ற மனித முகப்படத்தை நாசா வெளியிட்டது.
- 1987 - ஆல்பர்ட்டா மாநிலத்தில் எட்மன்டன் நகரில் இடம்பெற்ற சூறாவளியில் சிக்கி 27 பேர் உயிரிழந்தனர்.
- 1988 - மலேசியாவில் பாலம் ஒன்று உடைந்து வீழ்ந்ததில் 32 பேர் கொல்லப்பட்டு 1,674 பேர் படுகாயமடைந்தனர்.
- 1992 - நேபாளத் தலைநகர் காத்மண்டில் தாய்லாந்து விமானம் ஒன்று வீழ்ந்ததில் 113 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - பிடெல் காஸ்ட்ரோ தனது அதிகாரத்தை தற்காலிகமாக தனது சகோதரர் ராவுல் காஸ்ட்ரோவிடம் ஒப்படைத்தார்.
- 2006 - ஈழப்போர்: திருகோணமலையில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.
- 2007 - வட அயர்லாந்தில் பிரித்தானிய இராணுவம் தனது மிக நீண்ட கால இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி அங்கிருந்து வெளியேறியது.

### பிறப்புகள்

- 1704 - கேப்ரியல் கிராமர், சுவிற்ஸர்லாந்து கணிதவியலாளர் (இ. 1752)
- 1874 - செய்குத்தம்பி பாவலர், தமிழ் எழுத்தாளர், சதாவதானி (இ. 1950)
- 1912 - மில்ட்டன் ஃப்ரீட்மன், பொருளியல் நிபுணர் (இ. 2006)
- 1966 - ஜே.கே.ரௌலிங், ஆங்கில எழுத்தாளர்.

### இறப்புகள்

- 1980 - முகமது ரபி, புகழ் பெற்ற இந்தியப் பின்னணிப் பாடகர் (பி. 1924)

**1805 - இந்திய விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிரித்தானியரால் தூக்கிலிடப் பட்டார்.**







பாடசாலை ரீதியாக மேற் கொள்ளப்படவுள்ள டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தொடர்பாக யாழ். கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் நேற்று யாழ். கல்வி வலயத்தில் நடைபெற்றது இந் நிகழ்வில் பொதுச் சுகாதார பரிசோதகரும் பாடசாலைகள் சுகாதாரப் பிரிவு அலுவலருமான ஜே. உமாகாந்தன் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட அதிபர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

# துவிச்சக்கர வண்டிக்கான தரிப்பிடம் அமைப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி பிரதேச ஆதார வைத்திய சாலையில், நோயாளர்களை பார்வையிட வருவோர் தமது துவிச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை நிறுத்துவதற்கு இட வசதியின்மையைக் கருத்திற் கொண்டு, தற்போது இப்பகுதியில் துவிச்சக்கரவண்டி நிறுவுவதற்கான தரிப்பிடம் ஒன்றை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. (2)

# கொழும்பில் டெங்கு நோய் காரணமாக 16பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தில் மாத்திரம் கொழும்பு மாநகரத்தில் டெங்குநோயினால் பீடிக்கப் பட்டவர்களில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த மாதத்திற்குள் கொழும்பில் நான்கு டெங்குநோயாளர்கள் உயிரிழந்துள்ளதாகக் கொழும்பு மாநகரசபையின் சுகாதார அதிகாரி பிரதீப் காரியவசம் குறிப்பிட்டார்.

இவ்வாண்டில் ஆயிரத்து 419 பேர் டெங்கு நோயி னால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுள் 417 நோயாளர்கள் இம் மாதத்தில் இனங் காணப்பட்டுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி கூறினார்.

கொழும்பு மாநகரில் கொம்பனி வீதிப் பிரதேசம் அதிகளவில் அசுத்தமாகக் காணப்படுகிறது எனவும் சட்டவிரோதக் கட்டடங்களை அண்மித்த பகுதிகளில் குப்பைகளைக் கொட்டுவதனால் டெங்கு நோய் பரவக்கூடிய அபாயமுள்ள்தாகச் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (6-4)

# அரசாங்கம் சுகாதாரத் துறைக்கென 8ஆயிரம் கோடி ரூபாயை செலவிடுகிறது

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

சுகாதாரத் துறைக்கென வருடாந்தம் அரசாங்கம் 8 ஆயிரம் கோடி ரூபாயை செலவிட்டு வருவதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதனைத்தவிர உலக வங்கி, உலக சுகாத்ர நிறுவனம் உள்ளிட்ட தேசிய சர்வதேச அமைப்புகள் பெருந்தொகை நிதியினை சுகாதாரத்துறை மேம்பாட்டுக்காக செலவிட்டு வருகின்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இரத்தினபுரி மாவட்ட வைத்திய சாலையில் மகப்பேறு மற்றும் சிறுவர் விடுதிகளுக்கான புதிய கட்டடத் திறப்பு வைபவம் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலை மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர், தற்போதுள்ள வளங்களைக் கொண்டு சிறந்த முகாமைத்துவம் இடம்பெறுமானால் சுகாதாரத் துறையில் பற்றாக்குறைக்கு இடமில்லையெனவும் குறிப்பிட்டார்.

தற்போது எமது மருத்துவர்கள் பல சாதனைகளைச் செய்து வருகின்றனர். அண்மையில் வெற்றிகரமாக பல சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய சத்திரசிகிச்சைகளை இந்தியா வில் மேற்கொண்டால் 15 மில்லியன் ரூபா செலவாகிறது. அதனையே சிங்கப்பூரில் செய்தால் 20 மில்லியன் ரூபா செலவாகின்றது. எனினும் எமது மருத்துவர்கள் இதனை இலங்கையில் வெற்றிகரமாக மேற்கொள்கின்றமை பாராட்டுக்குரியது என்றார். (6-4)

# பாடல் மூலம் சிறுவர்களை ஆற்றுப்படுத்தும் பண்டிதர் கடம்பேசுவரனின் 'தீந்தேன்'

பண்டிதர் ம.ந.கடம்பேசுவரனின் "தீந்தேன்" என்னும் சிறுவர்கள் பாடல்கள் நூலைப் படித்தேன். அது முப்பத்திரண்டு பாடல்களைக் கொண்டுள்ளது. முதலாவது "சொல் - தீந்தேன் -சுவை" என்னும் பாடல், நூற் பயனை - இலக்கை எடுத்தியம்புகின்றது. அவை 1.நல்லுளம் (நற்பண்பு) பெறுதல் 2. மனத்தில் தெய்வத்தன்மை எய்துதல் 3.குற்றங்கடிதல் (தீமை செய்யாமை ) 4. புத்தர், முகமது நபி, காந்தி முதலானோர் போல் தெய்வப் புகழுடைய பெரியோராய்ச் சிறத்தல் என்பன.

## நூல் விமர்சனம்

சிறுவருக்கு நல்ல சூழலை வழங்குவதால் சமூகப் பொருத்தப்பாடுள்ள நல்லோரை உருவாக்கமுடியும் என்பர். விளையாட்டு -கதை -பாட்டு -நடிப்பு-செயல் ஆகியவை மூலம் கற்பித்தல் என்னும் முறையில் கடம்பேசுவரன், 'பாட்டை'க் கருவியாகக் கொண்டுள்ளார்.

உயர்ந்த பொருளையெல்லாம் எளிமையான தமிழில் இனிமையான சிறுவர் பாடலாகத் தந்துள்ளார். சிறுவருக்கு மட்டுமன்றி வளர்ந்தவருக்குங் கூடச் சில நல்ல போதனைகளைத் தந்துள்ளார். கடவுள் -மதம் - கோயில் -தொண்டு என்னும் போர்வையில் மறைந்து அல்லவை செய்யும் 'நல்ல' மனிதர் செயல்களையும் அடையாளங் காட்டத் தவறவில்லை. அவ்வாறான இடங்களில் ஆசிரியருடைய "கடிதோச்சி மெல்ல எறியும்" பாங்கை நயக்காமல் இருக்க முடியாது! தேன் இனிமையான குடிப்பு (பானம்) ஆக இருப்பதோடு மருந்தாகவும் பயன்படுவதன்றோ !

சிறுவர் உள்ளத்தில் தோன்றும் பல்வேறு எண்ணங்கள் -உணர்வுகள் -சிக்கல்கள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதோடு அவருள் தாமும் ஒரு சிறுவனாக நின்று, உரையாடியும் விளையாடியும் அவர்க்கு நல்ல வழிகாட்டியுள்ளார். சொற்களையும் தொடரமைப்பையுங் கூடச் சிறுவருடைய போக்கிலேயே அமைத்து கருத்தைச் சிறுவர் விரும்பி ஏற்கக் கூடியதாகச் செய்துள்ளார். கற்பித்தல் முறைகளில் சிறுவர் உளவியலைப் புரிந்துகொண்டு பாடலைக் கையாண்டுள்ளார்.

**பண்டிதர் வீ.பரந்தாமன்**

ஒவ்வொரு பாட்டிலும் ஒரு சொல்லோ, தொடரோ, கருத்தோ நயக்குந் தன்மையதாய் உள்ளது. எல்லா வகையிலும் அறிவு - திறன் - மனப்பாங்கு என்னும் ஆளுமை சிறந்த மக்களை, சிறு பராயத்திலிருந்தே உருவாக்க முயன்றுள்ளார் என்பது போற்றத்தக்கது. சிறுவர் கல்வியில் பயன்படுத்தக்கூடிய இந்நூலைக் கல்வியாளர் உவந்தேற்பர் என நம்புகின்றோம்.




# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய முறைசாராப் பிரிவின் தொழிற்பயிற்சிநெறி கண்காட்சியும் கைவினைப் பரிமாற்றமும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் 5 மணிவரை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)







வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 6 கல்வி வலயங்களைச் சேர்ந்த திட்டமிடல் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கான பாடசாலை தொகை மதிப்பீடு தொடர்பான செயலமர்வு நேற்று யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்வியமைச்சின் புள்ளிவிபரப் பிரிவின் புள்ளிவிபரவியலாளர் எம்.எம்.மொகமட் தாகீர், வடமாகாணக் கல்வித் திணைக்கள திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி.மு.அன்னமலர் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட பணிப்பாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# 2050 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை 940 கோடியாக இருக்கும்

## அமெரிக்க மக்கள் தொகை ஆய்வு

(வோஷிங்டன்)

உலக மக்கள் தொகை வரும் 2050 ஆம் ஆண்டில் 940 கோடியைத் தொட்டுவிடும். அப்போது இந்தியாவின் மக்கள் தொகை 170 கோடியாக அதிகரிக்கும் என அமெரிக்க மக்கள் தொகை ஆய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

இப்போது உலக மக்கள் தொகை 680 கோடியாக உள்ளது. 2025 ஆம் ஆண்டு வாக்கில் இந்த எண்ணிக்கை 800 கோடியை தொட்டுவிடும். உலக மக்கள் தொகையில் சீனா 130 கோடியுடன் முதலிடத்தை வகிக்கிறது. 25 ஆவது இடத்தில் இந்தியா உள்ளது.

இந்தியாவின் மக்கள் தொகை 120 கோடியாகும். இதே விகிதத்தில் மக்கள் தொகை வளர்ச்சி இருக்குமானால் 2050 இல் உலக மக்கள் தொகை 940 கோடியாக அதிகரிக்கும்.

இதில் ஆசியக் கண்டத்தில் மட்டும் மக்கள் தொகை 550 கோடியாக இருக்கும். இந்திய , சீன நாடுகளின் மக்கள் தொகை பெருக்கத்தைப் பொறுத்து இந்த எண்ணிக்கை மாறுபடலாம்.

ஆபிரிக்கக் கண்டத்தில் 2050 இல் மக்கள் தொகை 210 கோடியாக அதிகரிக்கும். அமெரிக்காவிலும் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. இப்போது 31 கோடியாக உள்ள அமெரிக்க மக்கள் தொகை 2050 இல் 39.9 கோடி அல்லது 45.8 கோடி அளவு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இருப்பினும் ஐரோப்பிய நாடுகள் மற்றும் ரஷ்யாவில் மக்கள் தொகை 2050 இல் குறையக்கூடும் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (6-4)

# கொங்கோ நாட்டில் படகு கவிழ்ந்து மூழ்கியதில் 200 பேர் பலியாகியுள்ளனர்



(கின்ஷாஷா)

ஆபிரிக்க நாடான கொங்கோவில் ஆற் றில் சென்ற படகு கவிழ்ந்து மூழ்கியதில் 200 பேர் பலியாகியுள்ளனர். அத்துடன் பலரை காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொங்கோ நாட்டின் வாமவுத் மாநிலம் பண்டந்து என்ற இடத்தில் உள்ள ஆற்றில் ஒரு படகில் 250 பேர் பயணம் செய்தனர். அவர்களில் பெரும்பாலானோர் விவசாயிகள் , மாணவர்கள் , வர்த்தகர்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. அளவுக்கு மீறிய பயணிகளை ஏற்றிச் சென்றமையால் பாரம் தாங்காமல் படகு கவிழ்ந்து மூழ்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் 150 பேர் பலியானதாக கொங்கோ அரசு தெரிவித்துள்ளது. ஆனால் 250 பேரில் 200 பேருக்கு மேல் பலியாகிவிட்டதாகவும் மேலும் பலரை காணவில்லை என்றும் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். விபத்தில் இருந்து உயிருடன் இன்னும் யாரையும் நாங்கள் மீட்கவில்லை. அவர்களாக எத்தனை பேர் நீந்தி உயிர் பிழைத்தனர் எனத் தெரியாது என்று ஒரு வீரர் தெரிவித்தார்.

இதேவேளை கொங்கோ நாட்டின் மணிமா என்ற இடத்தில் ஆற்றில் மே மாதம் நடந்த படகு விபத்தில் 100 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (6)

# இங்கிலாந்தில் குடியேற விரும்புவோர் ஆங்கில பரீட்சையில் சித்தியடைய வேண்டும்

ஆங்கிலம் தெரியாமல் இங்கிலாந்தில் குடியேறும் எண்ணம் இருந்தால் 3 மாதங்களுக்குள் அதை முடித்து விடுங்கள். ஏனெனில் அதன் பிறகு அந்நாட்டில் குடியேற அவர்கள் வைக்கும் ஆங்கில பரீட்சையில் சித்தியடைய வேண்டியது கட்டாயமாகிறது.

இங்கிலாந்தில் வசிப்பவரை திருமணம் செய்யவோ அங்கு நிரந்தரமாக தங்கவோ விரும்பும் ஐரோப்பிய நாடு அல்லாத வெளிநாட்டினருக்கு புதிய விதிமுறையை பிரதமர் டேவிட் கேமரூன் தலைமையிலான அரசு கொண்டு வந்துள்ளது.


அதன்படி குறுகிய கால வேலை, தற்காலிக பணி, சுற்றுலா ஆகிய காரணங்களில் இங்கிலாந்து வரும் எந்நாட்டினருக்கும் எந்த நிபந்தனையும் இல்லை.

ஆனால் இங்கிலாந்திலேயே குடியேறுவது அந்நாட்டு வாழ்க்கை துணையுடன் இணைவது நிரந்தர பணியாக தங்குவது ஆகிய காரணங்களில் வருவோர் ஆங்கிலம் பேசத் தெரிந்திருக்க வேண்டியது கட்டாயமாக்கப்படுகிறது.

அதற்காக பரீட்சை நடத்த அனுமதி வழங்க இங்கிலாந்து எல்லை முகமை (யுகேபிஏ) என்ற முகவர் அமைப்புக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது. இந்த அதிரடி மாற்றம் நவம்பர் 29 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாக யுகேபிஏ அறிவித்துள்ளது.

இப்போது இங்கிலாந்தில் தங்கியுள்ள ஐரோப்பா அல்லாத வெளிநாட்டினர், இங்கிலாந்து குடிமகன்/மகளை திருமணம் செய்பவும் இந்த விதிமுறை பொருந்தும் ஆங்கில பரீட் சையில் சித்தியடைந்து அங்கு குடியேறினா லும் 2 ஆண்டுகள் தற்காலிக குடியுரிமை மட்டுமே கிடைக்கும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (6-4)

# பாக். முகாம்களை அழியுங்கள்; ஆப்கான் அதிபர் கர்சாய் ஆவேசம்



(காபூல்)

பாகிஸ்தானில் செயல்படும் பயங்கரவாத முகாம்களை அழிக்க மேற்கத்திய நாடுகள் முன்வர வேண்டும் என ஆப்கான் அதிபர் ஹமீது கர்சாய் ஆவேச மாக பேசினார்.

இது குறித்து காபூலில் நிருபர்களிடம் அவர் பேசியதாவது,

பயங்கரவாதிகளுக்கான போர் ஆப்கான் நகரங்களிலோ அல்லது கிராமங்களிலோ விளங்கும் முகாம் கள் பயிற்சி மையங்கள் மற்றும் நிதி குவியும் மையங்களில் தான் இந்தப் போர் நடந்து வருகிறது.

சர்வதேச அளவில் ஆப்கானுடன் நெருக்கமாக உள்ள மற்ற நாடுகளுக்கு பயங்கரவாதிகளை அழிக்கும் திறன் இருந்தும் அவர்களை அழிக்க அவர்களால் ஏன் முடியவில்லை? பயங்கரவாத முகாம்களை முற்றிலுமாக ஒழிக்க மேற்கத்திய நாடுகள் முன்வர வேண்டும். இவ்வாறு கர்சாய் கூறினார்.

அமெரிக்க இராணுவ இரகசியங்கள் வெளியான விவகாரத்தில் இரட்டை வேடம் போடும் பாகிஸ்தான் தொடர்பான கொள்கை




நடக்கவில்லை மாறாக ஆப்கானுக்கு வெளியே (பாகிஸ்தானில்) நடந்து வருகிறது என்பதை உலக நாடுகள் தெரிந்து கொள்வதற்கான தருணம் தற்போது ஏற்பட்டுள்ளது. பயங்கர வாதிகளுக்கு புகலிடமாக களை மேற்கத்திய நாடுகள் மறுபரிசீலனை செய்வது நல்லது என ஆப்கான் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ரங்கீன் தெரிவித்திருந்த கால கட்டத்தில் கர்சாய் இவ்வாறு பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (6-4)

# பாகிஸ்தானில் கடும் மழை 100 பொதுமக்கள் பலி

(இஸ்லாமாபாத்)

தென்மேற்குப் பாகிஸ்தானில் பெய்து வரும் பருவக்காற்று மழை காரணமாக ஏற்பட்டிருக்கும் வெள்ளப் பெருக்கில் அகப்பட்டு 100 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

மழை காரணமாக ஆறுகள் பெருக்கெடுத்ததால் கிராமங்களினுள் வெள்ளநீர் நுழைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் பாகிஸ்தானின் பல பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிலையம் முன்வந்துள்ளது. (6-4)

# மெக்ஸிக்கோவில் முன்னணி போதைப் பொருள் வர்த்தகர் பாதுகாப்பு படையினரால் சுட்டுக்கொலை



மெக்ஸிக்கோவின் முன்னணி போதைப் பொருள் வர்த்தகர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இகாநிக்கோ கொரோனல் என்ற மெக்ஸிக்கோவின் முன்னணி போதைப் பொருள் வர்த்தகரை அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

இவர் சின் அலோவா என்ற பலம் பொருந்திய போதைப் பொருள் வலையமைப்பின் முக்கியஸ்தராகவும் தேடப்பட்டு வரும் போதைப் பொருள் வர்த்தகரான குஸ்மானின் வலது கரமாகவும் கொரோனல் செயற்பட்டார் என குறிப்பிடப்படுகிறது.

கொரோனலின் மரணம் போதைப் பொருள் வட்டாரத்தை உலுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொரோனலை கைது செய்யுமாறு அமெரிக்காவும் மெக்ஸிக்கோவும் ஏற்கனவே பிடி விராந்துகளை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொரோனலை கைது செய்ய தகவல்களை வழங்குவோருக்கு ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்திருந்தது.

எனினும் போதைப் பொருள் வர்த்தகம் காரணமாக ஏற்படும் மோதல்களில் 25 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. (6-4)



சீனாவில் பெய்த கடும் மழையால் தய்சவ் பகுதி முழுவதும் வெள்ளம் சூழ்ந்தது. பாதுகாப்பான இடம் தேடி சிறிய மரப்பலகையில் தமது குழந்தையுடன் வேறு இடத்திற்கு பயணித்த ஒரு குடும்பம்.

# மூன்றாண்டுகளில் மாவோயிஸ்ட்டுகளின் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்

## ப.சிதம்பரம் தெரிவிப்பு



(புதுடில்லி)

அடுத்த மூன்று ஆண்டுகளில் மாவோயிஸ்ட் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மத்திய உள்துறை அமைச்சகத்தின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் அவர் பேசுகையில்,

''மாவோயிஸ்ட் பிரச்சினைக்கு மத்திய, மாநில அரசுகளின் கூட்டு நடவடிக்கை மூலம் தீர்வு காணப்படும்.அடுத்த மூன்று ஆண்டுகளில் இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விடும் என அரசு நம்புகிறது.

மாவோயிஸ்ட் பாதித்த மாநிலங்களுடன் மத்திய அரசு தீவிர ஆலோசனை மேற்கொண்டதைத் தொடர்ந்து இரண்டு செயற்றிட்டங்களை செயற்படுத்த ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, மாவோயிஸ்ட் பாதித்த மாநிலங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு.

துணை இராணுவப் படைகளை ஈடுபடுத்துவது ,உளவுத்துறை தகவல்களை அளிப்பது, வளர்ச்சிப் பணிகள் மற்றும் பாதுகாப்பு செலவினங்களுக்கு நிதி ஒதுக்குதல் என மாவோயிஸ்ட் பாதித்த மாநிலங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்து வருகிறது.

மாவோயிஸ்ட்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக மேற்கு வங்கம், ஒரிஸா, சத்தீஸ்கர் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் கூட்டுப்படை அமைக்கப்படும்.

மத்திய அரசின் பங்காக மேற்கண்ட மாநிலங்களுக்கு கூடுதல் உதவியக ஹெலிகொப்டர்கள்,போக்குவரத்து தேவைகளுக்கான நிதியை ஒதுக்குவது ,400 காவல் நிலையங்களை மேம்படுத்துவது,புதிதாக சிறப்பு பொலிஸ் அதிகாரிகளை நியமிப்பது ஆகியவற்றுக்கு மத்திய அரசு உதவி செய்யும்.

திட்டக் கமிஷனின் உறுப்பினர்,செயலர் தலைமையில் அதிகாரக்குழு அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மாவோயிஸ்ட் பாதித்த மாநிலங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய வளர்ச்சிப் பணிகளுக்கு தற்போது நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் வழிமுறைகள் குறித்து இக்குழு மறு ஆய்வு செய்யும்.

அதனடிப்படையில் வீதி இணைப்பு, ஆரம்பக் கல்வி, ஆரம்ப சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதி ஆகிய திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் நடைமுறைப்படுத்துவது குறித்து இக்குழு ஆலோசனை தெரிவிக்கும்'' என்றார். (6)

# சீமானின் உதவியாளருக்கு முன் ஜாமின் வழங்கப்பட்டது

(சென்னை)

பிரபல காமெடி நடிகர் கருணாஸ் கதிர்காமம் முருகன் கோவிலுக்கு செல்லத் திட்டமிட்டிருந்தார். அவர் இலங்கை அரசுக்கு ஆதரவாக இலங்கை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளக்கூடாது என கருணாசுக்கு மிரட்டல் வந்தன.

இதுகுறித்து கருணாஸ் பொலிஸ் ஆணையாளரிடம் புகார் கொடுத்துள்ளார். இது தொடர்பில் திருமங்கலம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில் சீமானின் உதவியாளரும் உதவி இயக்குநருமான மகேந்திரவர்மன் மிரட்டியது தெரியவந்தது.

இந்நிலையில் மகேந்திரவர்மன் முன்பிணைகேட்டு மேல் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார். அதில் கருணாசை மிரட்டவில்லை என்றும் இலங்கைக்கு செல்ல வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டதாகவும் கூறியுள்ளார்.

அந்த மனுவை நீதிபதி கே.என். பாஷா விசாரித்து முன் ஜாமீன் வழங்கி உத்தர விட்டதுடன் ஒருவாரத்திற்கு தினமும் திருமங்கலம் பொலிஸ் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திடும்படியும் நிபந்தனை விதித்தார். (6)

# பாரதச் செய்திகள்

## ஐ.நா.மனித உரிமை அவையை நோக்கிய

# சிவந்தனின் நடைப்பயணத்திற்கு வைகோ வாழ்த்து

இலங்கைத் தமிழர்களை காக்கக் கோரியும், போர்க்குற்றங்கள் தொடர்பாக ஜனாதிபதி ராஜபக்ஷ மீது சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை நடத்தக் கோரியும் பாரிஸ் நகரிலிருந்து ஜெனீவா நோக்கி நடைப் பயணம் மேற்கொண்டுள்ளதாக ஈழத்தமிழர் சிவந்தனுக்கு ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ வாழ்த்துத்தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

அழிவின் பிடியிலிருந்து ஈழத்தமிழ் மக்களைக் காக்க உலகெங்கும் உள்ள தன்மானத் தமிழர்கள் இடையறாத போராட்டங்கள், கிளர்ச்சிகள்,அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும் என்ற உந்துதலை ஏற்படுத்துகின்ற வகையில் ஈழத்தின் வீரப் பிள்ளை சிவந்தன் பாரிஸ் பட்டணத்தில் இருந்து கால்நடையாகப் புறப்பட்டு சுவிற்சர்லாந்து நாட்டில் ஜெனீவா நகரில் உள்ள ஐ.நா.சபையின் மனித உரிமைகள் அவையை நோக்கி நடைப்பயணத்தைத் தொடங்கியுள்ளார்.

பகலில் நெருப்பெனக் கொதிக்கும் வெயிலிலும், இரவில் ஊசிமுனையாகத் தைக்கும் கொட்டும் பனியிலும் தன்னைத் தானே வருத்திக்கொண்டு நடக்கிறார். சிவந்தனின் பயணம் வெற்றிகரமாக நடைபெறும் பயணத்தின் குறிக்கோள் ஈடேறவும், அவரது உடல் நிலை பாதிக்காத வகையில் இயற்கைத் தாய் துணைபுரிய வேண்டும். தியாகப் பயணம் மேற்கொண்டுள்ள சிவந்னுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு வைகோ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.(6-4)



பெங்களூர் பயணத்தை முடித்துக்கொண்டு புதுடில்லி வந்த பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனுக்குத் ராஷ்டிரபதி பவனில் வரவேற்பு அளிக்கப் பட்டது .கமரூனை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கைகுலுக்கி வர வேற்பதைப் படத்தில் காணலாம்.

# வேலூர் சிறைச்சாலையில் சீமானுக்கு மேலும் நெருக்கடி

(வேலூர்)

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சீமானுக்கு சிறை அதிகாரிகள் மேலும் நெருக்கடிகள் கொடுத்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசியப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான், சிறைச்சாலைக்குள் நடைப் பயணம் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு, நிலுவையில் உள்ளது. இந்நிலையில், சிறையில் உள்ள நூலகத்திற்கு சென்று புத்தகங்கள் வாசிப்பதற்கு சிறை அதிகாரிகள் அனுமதி மறுப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இவர் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று அதே சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகன், பேரறிவாளன் உள்ளிட்டோரை அடிக்கடி சந்தித்து நீண்ட நேரம் பேசி வந்தார்.



இந்நிலையில் சிறையில் யாருடனும் அதிகநேரம் பேசக்கூடாது என்று சீமானுக்கு புதிய நெருக்கடி கொடுக்கப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (6-2)

# காங்கிரஸ் ஆட்சியில் இருக்கும் வரை இலங்கைப் பிரச்சினைக்கு முடிவு வராது

## நாஞ்சில் சம்பத்

காங்கிரஸ் இருக்கும் வரை இலங்கைப் பிரச்சினைக்கு முடிவு வராது என்று ம.தி.மு.க கொள்கை பரப்பு செயலாளர் நாஞ்சில் சம்பத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ராமநாதபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

பலகோடி ரூபாய் செலவு செய்து விடுமுறை அளித்து, அரசு வாகனங்களைப் பயன்படுத்தி ஐந்து நாட்கள் செம்மொழி மாநாடு நடத்தியதை, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா ஒரு மணி நேரத்தில் துவம்சம் செய்து சாதனை படைத்துவிட்டார்.

அத்துடன் ராகுல் காந்திக்கு இயல்பாகவே கருணாநிதியை பிடிக்கவில்லை. அதனால் தான் சென்னை வரும்போது பார்ப்பதில்லை.அரசுக்கு எதிரான கூட்டணியைப் பற்றி சிந்திப்பது ராகுல் மட்டும்தான்.

மேலும் விலைவாசி உயர்வு அரசுக்கு பெரிய ஆபத்தை ஏற்படுத்தும் .சட்டசபை தேர்தல் விரைவில் வரும். காங்கிரஸ் தி.மு.க. கூட்டணியில் பிரிவு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் காங்கிரஸ் இருக்கும் வரை இலங்கைப் பிரச்சினைக்கு முடிவு வராது. சோனியாவால் தமிழர்களுக்கு பயன் இல்லை. காங்கிரஸ் கட்சியோடு அ.தி.மு.க., கூட்டணி வரும் பட்சத்தில், எங்கள் கருத்தில் உறுதியோடு இருந்து, கூட்டணியில் அமைதியாக இருப்போம் என்றார்.

(6-4)

ஓநாய்க்கு கருணை காட்டுவது ஆட்டுக் குட்டிக்கு கொடுமை செய்வதாகும்.

~ ஆப்கானிஸ்தான்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ்.மாவட்டத்தில் திங்களன்று டெங்குத் தடுப்பு சிரமதானப் பணி

## யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நாளைமறுதினம் 2ஆம் திகதி திங்கட் கிழமை சகல பாடசாலைகள் மற்றும் அரச,அரசசார்பற்ற நிறுவனங்களிலும் டெங்குத்தடுப்பு, சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனயாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். இது தொடர்பில் யாழ். அரச அதிபர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

இலங்கையில் பல மாவட்டங்களில் டெங்குநோய் தீவிரமாக பரவிவருவதுடன் பல உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது.யாழ்.மாவட்டத்திலும் தற்போது டெங்கு நோயின் பரம்பல் பல இடங்களில் காணப்படுகிறது.

இலங்கையில் டெங்குநோயை கட்டுப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைக்கப்பட்ட தேசிய டெங்கு தடுப்பு செயலணிக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக ஓகஸ்ட் மாதத்தில் 2,9,21 மற்றும் 28ஆம் திகதி ஆகிய நாட்களில் இலங்கை முழுவதும் டெங்கு நோய்த்தடுப்புத் தினங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. வட மாகாண டெங்கு தடுப்பு செயலணிக் குழுவின் தலைவர் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி சகல பாடசாலைகளிலும்,அரசாங்க நிறுவனங்களிலும், அரச சார்பற்ற நிறுவனங்களிலும் டெங்கு தடுப்பு சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பாடசாலைகளில் பாடசாலை மாணவர்களின் உதவியுடன் டெங்கு தடுப்பு சிரமதானப் பணிகள் இடம்பெறவேண்டும். பாடசாலை அதிபர்கள் இதற்கான ஏற்பாட்டை செய்யவேண் டும்.

ஒவ்வொரு அரச, அரசசார்பற்ற நிறுவனத்திலும் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் டெங்கு தடுப்பு சிரமதானப் பணிகளில் ஈடுபடவேண்டும்.

பாடசாலைகளிலும் நிறுவனங்களிலும் சிரமதானப்பணியின்போது சேகரிக்கப்படும் குப்பைகளை அந்தப் பிரதேசத்துக்குரிய உள்ளூராட்சி மன்றங்கள் குப்பைமேடுகளுக்கு ஏற்றிச்செல்ல ஒழுங்குசெய்யப்படவேண்டும்.

டெங்குக்கட்டுப்பாட்டு சிரமதானப்பணிகளுக்கான ஆலோசனையை சுகாதார வைத்திய அதிகாரிகளும். பொதுச் சுகாதார பரிசோதகர்களும் வழங்குவர்.

டெங்கு சிரமதானப் பணிகளை கண்காணிக்க சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச செயலகம், வலயக் கல்விப் பணிமனை, உள்ளூராட்சி மன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக்குழு ஒவ்வொரு பிரதேசசெயலக பிரிவிலும் அமைக்கப்பட்டு டெங்கு சிரமதானப் பணிகளை பாடசாலைகளிலும் நிறுவனங்களிலும் நேரடியாக சென்று கண்காணிக்க வேண்டும்.

டெங்கு சிரமதானப் பணிகளின் நிறைவில் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர், நிறுவனத் தலைவர் தமது வளாகத்தில் டெங்கு சிரமதானப் பணி பூரணமாக நடைமுறைப்படுத்தியதை உறுதிப்படுத்தி ஓர் சான்றிதழ் வழங்க வேண்டும் இதற்கான படிவம் அப்பிரதேசத்துக்குரிய பொது சுகாதாரப் பரிசோதகரினால் வழங்கப்படும்.

பொது சுகாதாரப் பரிசோதகர் பாடசாலை அல்லது நிறுவனத்தை பார்வையிட்டு சிரமதானப்பணி திருப்திகரமாக நிறைவுபெற்றிருந்தால் உறுதிப்படுத்தி சான்றிதழை சுகாதார வைத்திய அதிகாரியிடம் கையளிப்பார்.சிரமதானப்பணி பூரணமாக நிறைவேற்றப்படாவிடின் அது பற்றி ஆலோசனைகளை பாடசாலை அதிபருக்கு அல்லது நிறுவனத் தலைவருக்கு வழங்குவர்.டெங்குத்தடுப்பு சிரமதானப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்காத பாடசாலை அதிபர்களுக்கு அல்லது நிறுவனத் தலைவர்களுக்கு எதிராக டெங்குத் தடுப்புச்சட்டத்தின்கீழ் உரிய சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும்என்று கூறினார். (ச)

# சட்ட நடவடிக்கை எடுக்காதவரை டெங்கை ஒழிக்க முடியாது

நாங்கள் தமிழர்.எங்களுக்கு வாயால் சொன்னால் ஏறாது. இது பிறவிக்குணம். பிறவிக் குணத்தை மாற்றுவது முடியாதகாரியம்.

அதே நேரம் சொல்ல வேண்டியவர் சொன்னால் மட்டுமே நாம் செவி மடுப்போம்.செய்து முடிப்போம்.ஆனால் இந்த உண்மை எங்கள் உயர் அதிகாரிகள் பலருக்குத் தெரியாது. தெரிந்தால் அப்பாவிப் பணியாளர்கள் படாதபாடுபடும் தேவை இராது.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் சுகாதார பகுதியும், உள்ளூராட்சி சபைகளும் கடுமையாகப் பாடுபடுகின்றன.வீடு வீடாகச் சென்று போதனை செய்வது முதல் கூட்டம் வைப்பது , ஆலோசனை வழங்குவது என அவர்கள் அலைந்துதிரிகின்றனர்.

இத்தகைய பிரசாரங்களால் இருபத்தைந்து வீதமான மக்களே விழிப்படைந்து டெங்கு ஒழிப்பில் தாமாகவே ஈடுபடுகின்றனர்.

ஏனைய 75 வீதமானவர்களிடம் எந்தவிதமான விழிப்புணர்வும் ஏற்படவில்லை.

அதாவது அவர்களிடம் டெங்கு பற்றிய அறிவு உள்ளது.ஆனால் மனமாற்றம் இல்லை. இந்த மனமாற்றம் உடனடியாக ஏற்படும் என்று யாரேனும் நம்புவார்களாயின் அது மகா தவறு. அப்படியானால் எப்படி டெங்கை ஒழிப்பது? இப்படி யாரேனும் கேள்வி எழுப்பினால் அப்படி கேளுங்கள் என்றுதான் சொல்வோம்.

ஆம், டெங்கை ஒழிப்பதாக இருந்தால் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். பற்றைகள் பற்றிக் கிடக்கும் காணிகளை எந்த விததயவு தாட்சண்யமும் இன்றி சுவீகரிக்க வேண்டும்.

நாயின் சொந்தக்காரன் நாயைக் கட்டி வைத்து வீட்டு வளவுக்குள் வளர்க்கவேண்டும் என்பது போல, காணியின் சொந்தக்காரன் காணியை துப்புரவு செய்து தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

தனித்துக் காணிக்கு உரிமை கொண்டாடுவதுதான் அவரின் செயலாக இருக்குமாக இருந்தால் அந்தக் காணியை சுவீகரித்து உடனடியாகவே காணியற்றவர்களுக்கு அதனை வழங்கவேண்டும்.

இத்தகையதொரு நடவடிக்கையை பொறுப்பான அரச அமைப்புகள் எடுக்குமாயின் எங்கும் தூய்மை, எங்கும் துப்புரவு என்ற நிலை உருவாகும்.

இதனைத் செய்யாதவரை பற்றைக் காணிகள் இருக்கவே செய்யும்.

என்றாவது ஒரு தடவை துப்புரவு நடக்கும். பின்னர் மீண்டும் பழைய நிலை.இதுவே யாழ்ப்பாணத்தின் மரபு.இதற்கெல்லாம் முடிபு கட்டுவதாயின் எங்கள் அரச உயர் அதிகாரிகள் துணிச்சலான முடிபுகளை எடுக்க வேண்டும்.

இதில் ஒன்றுதான் பற்றைக் காடாகக் கிடக்கும் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக் கையாகும்.

# மாதாந்த இசையரங்கும் நூல் வெளியீடும்

இணுவையூர் ரசிகப்பிரியா சபை நடத்தும் மாதாந்த இசையரங்கும் பிரபல எழுத்தாளர் கே.எஸ்.ஆனந்தனின் 'சந்திரிகை' நூல் வெளியீடு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் கலையரங்கில் நடைபெறும்.ரசிகப்பிரியா சபாவின் தலைவர் வி.கே.குகானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகவும் ,இந்தியா மணிமேகலை பிரசுர நிர்வாக இயக்குநர் ரவி தமிழ்வாணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர்.நூலினை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வெளியிட்டு வைப்பார். இதேவேளை சிறப்பு நிகழ்வாக மணிமேகலை பிரசுர புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை நடைபெறும். (ச-3)

# இந்தியாவுக்குச் சென்று திரும்புவோரூடாக மலேரியா ஒட்டுண்ணி பரம்பல் ஆபத்து

## யாழ்.பிராந்திய மலேரியா தடைப்பகுதி வைத்தியர் எச்சரிக்கை

இந்தியாவுக்குச் சென்று மீள யாழ்ப்பாணத்திற்கு திரும்புவோரூடாக மலேரியா ஒட்டுண்ணியின் பரம்பல் ஏற்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய மலேரியா தடைப்பகுதி பொறுப்பு வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார் இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.பிராந்திய மலேரியா தடைப்பகுதியின் வழிகாட்டலுடன், அவ்வப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஒத்துழைப்புடன், அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் மலேரியாவின் தாக்கம்உருவாகாது தடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் அண்மைக்காலமாக இங்கு கண்டுபிடிக்கப்பட்ட மலேரியா நோயாளிகள் இந்தியா சென்று வந்தவர்களாக உள்ளனர். யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களில் மலேரியா ஒட்டுண்ணிகள் இல்லை என்பது தொடர்ச்சியாக செய்யப்பட்டுவரும் இரத்தப் பரிசோதனை ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுவருகிறது.

ஆனால் இந்தியா சென்று மலேரியா ஒட்டுண்ணியுடன் எவராவது வரும்போது யாழில் மலேரியா ஒட்டுண்ணியின் பரம்பல் ஏற்படும் ஆபத்துள்ளது. எனவே இந்தியா செல்பவர்கள்,குறிப்பாக தமிழ்நாட்டின் சென்னையையும், அதனை அண்டிய பகுதிகளுக்கும் செல்பவர்கள் அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குச் சென்று, தவறாது மலேரியா வராது தடுப்பதற்கான தடுப்புச் சிகிச்சையினை பெற்றுச் செல்லுமாறு கேட்கப்படுகின்றனர்.

தற்போது நாட்டில் சுமுக நிலையேற்பட்டதால் பலர் இங்கிருந்து தமிழ்நாடு சென்று வருகின்றனர். எதிர்வரும் காலங்களில் பயண ஒழுங்குமுறைகள் மேலும் இலகுவாக்கப்படவுள்ளதால் அதிகளவானோர் இந்தியா செல்வார்கள்.

எனவே அவ்வாறு செல்லும் அனைவரும் அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குச் சென்று தவறாது மலேரியா வராது தடுப்பதற்கான தடுப்புச் சிகிச்சையினை பின்பற்றிச் செல்வதன் மூலம் தாமும் மலேரியாவின் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பு பெறுவதோடு யாழ்ப்பாணத்திலும் மலேரியாவை இல்லாது செய்வதற்கு நாம் எடுக்கும்நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இருக்கும். (ச)

# மானிப்பாய் கிராமத்தில் ஆதன மீள்மதிப்பீடு

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் கிராம (ஆனைக்கோட்டை) உப அலுவலக ஆதன மீள்மதிப்பீட்டு பணிகள் வரிமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இம் மதிப்பீட்டு வேலைகளுக்கு தங்கள் வீடுகளுக்கும், ஆதனங்களுக்கும் வரும் உத்தியோகத்தர்களுக்கு அவர்களால் கோரப்படும்தகவல்களை வழங்கி, வரி மதிப் பீட்டு வேலைகளை விரைவில் செய்து முடிப்ப தற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியுதவு மாறு மானிப்பாய் வலி தென்மேற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி புஸ்பலிங்கம் கேட்டுக்கொள்கின்றார். (ச-2)



# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## தியானம்



தியானம் என்பது ஒரு குறிப்பிட்ட பொருளின் மீது மனத்தைக் குவியச் செய்வது.மனம்ஒரு பொருளின் மீது ஒருமைப்பட்டு நிலைபெறுமானால் பிறகு அதனைஎந்தப் பொருளின் மீதும் குவிக்கலாம்.

மனத்திற்குப் பிடித்த பொருள்மீது தியானம் செய்யும்போது மனம் எளிதாக அமைதி அடைகிறது என்பது உண்மை. இந்த நாட்டில் இத்தனை தெய்வ வடிவங்களை வழிபடுவதற்கு இதுதான் காரணம்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் அனுசரணையுடன் நயினாதீவு மேகலை அரங்கில் நடைபெற்ற பல்கலாசார நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் திருமதி. எம். எஸ். விக்கிரமசிங்க உரையாற்றுவதையும் சூழல் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு உபகரணங்கள் வழங்குவதையும் யாழ். கலைஞர்களின் பக்தி இசை கீதங்கள் நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# தனிமையில் வசிப்பது மிகவும் ஆபத்தானது

(நியூயோர்க்)

குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் நல்ல உறவு வைத்திருப்பவர்கள் தனியாக வசிப்பவர்களை விட நீண்டகாலம் வசிப்பதற்கு 50 சதவீதம் அதிக வாய்ப்பு இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

தனியாக வசிப்பது என்பது மிகவும் தீங்கானது. 15 சிகரெட்டுக்களை ஒரே நாளில் புகைத்தால் என்ன தீங்கு ஏற்படுமோ அதற்கு இணையான தீங்கு தனிமையில் வசிப்பவர்களுக்கு கிடைக்கும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் உடா மாநிலத்தில் பிரோவோ என்ற இடத்தில் பிரிக்காம்யங் பல்கலைக் கழகத்தை சேர்ந்த உளவியல் துறை பேராசிரியர் ஜீலியான் ஹோல்ட் லன்ஸ்டட் தலைமையில் ஆராச்சியாளர்கள் நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது. இந்த ஆய்வில் தான் தனிமையில் இருப்பதால் ஏற்படும் தீங்கு பற்றிய உண்மைகள் தெரியவந்தன. (6)

# இலங்கைக்கான பயண எச்சரிக்கையை பிரித்தானிய அரசாங்கம் நீக்கியுள்ளது

(கொழும்பு)

இலங்கையின் வடக்கில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்குப் பயணம் செய்வதற்கு எதிரான பயண எச்சரிக்கையை பிரித்தானிய அரசாங்கம் நீக்கியுள்ளது.

கடந்த ஜூன் மாதம் இலங்கைக்கான பிரிட்டனின் பிரதி உயர்ஸ்தானிகர் மார்க் கூடிங் தலைமையில் உயர்ஸ்தானிகராலயத் தூதுக்குழு மேற்படி பகுதிக்கு விஜயம் செய்து பாதுகாப்பு மதிப்பீடுகளை மேற்கொண்டதையடுத்து இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பிரித்தானிய உயர் ஸ்தானிகளர் பீட்டர் ஹேய்ஸ் கூறுகையில், இந்த மாற்றத்தின் மூலம் இலங்கையில் எந்தவொரு பாகத்திற்கு செல்வதற்கு எதிரான எமது எச்சரிக்கை எதுவும் இனிமேலும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அப்பகுதியில் நிலக்கண்ணி அச்சுறுத்தல் இருப்பதையும் அப்பகுதிக்குச் செல்வதற்கு இலங்கை பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவையென்பதையும் அங்கு விஜயம் செய்ய விரும்பும் பிரித்தானியர்கள் அறிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (6)

# வருமானம் குன்றிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல்

(கொழும்பு)

சர்வதேச குடியிருப்பு தினத்திற்கு அமைவாக குறைந்த வருமானம் பெறுவோரின் வீடுகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை ஒன்றை தேசிய வீடமைப்பு அதிகார சபை முன்னெடுக்கவுள்ளது.

இதில் கொழும்பு நகரில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை கட்டியெழுப்புவதே இதன் நோக்கமாகும் என்று அதிகார சபையின் பொது முகாமையாளர் சாஹர பலன்சூரிய திெவித்துள்ளார். (6)

# இலங்கைக்கான அதிகளவு உதவிகளை சீனாவே வழங்கி வருகின்றது

## அரசாங்கம் தெரிவிப்பு

இலங்கைக்கு நிதி உதவி வழங்கி வருகின்ற பிரதான நிறுவனமாக சீனாவின் இறக்குமதி ஏற்றுமதி வங்கி காணப்படுவதாக பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

எவ்வித கேள்விகளோ நிபந்தனைகளோ இன்றி இந்த வங்கியினால் இலங்கைக்கு 50 மில்லியன் டொலர்கள் நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாறான சிக்கல் அற்ற கடன்கள் எதனையும் வழங்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் தமது நிதி உதவிகளை வழங்கி வருகின்றன.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் வாழ்வளிப்பு நடவடிக்கைகளுக்காக பாரிய நிதி உதவிகளை வழங்கி வருகிறது.

இந்த நிலையில் கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற மொத்த கடன் தொகையான 2.2 பில்லியன் டொலர்களில் 1.2 பில்லியன் தொகையானது சீனாவினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய தொகையில் அதிக அளவானது இந்தியா மற்றும் ஜப்பான் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனவே சீனா , இந்திய மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கைக்கு ஐரோப்பிய மற்றும் மேற்கத்தேய நாடுகள் வழங்கிய உதவிகள் மிகவும் குறைவானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இந்த நாடுகளில் இருந்து பெறப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டிய நிலையின் போது இலங்கை என்ன செய்யும் என கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதில் வழங்கிய சரத் அமுனுகம ஏனைய வர்த்தக வங்கிகள் வழங்கிய நிகழ்ச்சி வேலைத்திட்டங்களை விட சீனாவினால் வழங்கப்பட்ட வேலைத்திட்ட முன்யோசனைகள் இலகுவானதாக இருந்ததாக குறிப்பிட்டார். (6-2)

# தூய்மையான குடிநீரும் சுகாதாரமான கழிப்பறை வசதியும் அடிப்படை மனித உரிமை

## ஐ.நா.பிரகடனம்

தூய்மையான குடிநீரும், சுகாதாரமான கழிப்பறை வசதியும் உலகிலுள்ள அனைத்து மக்களின் அடிப்படை மனித உரிமை என்று ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்துள்ளது.

ஐ.நா.வின் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 122 நாடுகள் வாக்களித்தன. ஆனால் அமெரிக்கா, கனடா, பிரிட்டன், அவுஸ்திரேலியா உட்பட 41 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

குடி நீர் தொடர்பான உரிமைகள் குறித்து ஒரு கருத்தொற்றுமையை ஏற்படுத்த ஜெனிவாவில் இயங்கும் ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

இந்தநிலையில் ஐ.நா.வின் இந்தத் தீர்மானம் அடிப்படையான நடவடிக்கையைக் குறைத்து மதிக்கப்படுவதாக இருக்கின்றது என்றும் அதனால் தாம் வாக்கெடுப்பில் பங்கு பெறவில்லை என்றும் வாக்களிப்பில் கலந்து கொள்ளாத 41 நாடுகள் கருத்து தெரிவித்துள்ளன.

குடிநீர் அடிப்படை மனித உரிமை என்று பிரகடனப்படுத்தும் ஐ.நா.வின் இந்தத் தீர்மானத்தில் உலகளவில் 88 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு பாதுகாப்பான குடி நீர் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 260 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் கிடைப்பதில்லை என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு எதிராக யாரும் வாக்களிக்கவில்லை.

உலகெங்கும் ஆண்டுதோறும் குடிநீர் மற்றும் சுகாதாரமின்மை தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டு ஐந்து வயதுக்கு உட்பட்ட 15 லட்சம் சிறார்கள் இறக்க நேரிடுகி றது என்பது கவனத்துக்குரியது. (6)

# சிறுவர் நல்வாழ்வு பற்றிய கண்காட்சி

(கொழும்புத்துறை)

சிவத்தமிழ் மானிடவியல் கழகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி மஹோற்சவத்தை முன்னிட்டு சிறுவர் நல்வாழ்வு பற்றி எமது சமுதாயத்திற்கு எவ்வாறு விழிப்புணர்வுகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றி கண்காட்சி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளதாக சிவத்தமிழ் மானிடவியல் கழகத்தின் இயக்குநர் வைத்திய கலாநிதி சி.எஸ். ஜமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

இக்கண்காட்சியில் இடம்பெயர்ந்த மாணவர்களின் பாடசாலை கல்வி பற்றியும் அதனோடு இணைந்த மாலை நேர கல்வி வகுப்பு மாதிரி அமைப்பு ஒன்றை அமைத்து அதற்கான விளக்கமளித்தல் மாணவர்களிடையே கல்வி அறிவை ஊட்டி அதற்கான ஆரோக்கியத்தை மேம்படுத்தல் , டெங்கு நோய் , நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்களிலிருந்து எவ்வாறு மாணவர்களை பாதுகாப்பது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் , சுகாதார நலன்புரி விடயங்கள் ,உடல் , உள , ஆன்மீக ஆரோக்கியம் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக இக்கண்காட்சி அமையவிருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (2-51-6)

# பாடசாலை மணவர்களுக்கான சீருடைத்துணி சீனாவிலிருந்து கொள்வனவு

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடத்துக்கான சீருடைக்கான துணிவகைகளை சீனாவிலிருந்து நேரடியாக கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

டிசம்பர் மாத பாடசாலை விடுமுறைக்கு முன்னர் அடுத்த வருடத்திற்கான பாடசாலை சீருடைத்துணி பொதிகளை மாணவர்களுக்கு விநியோகிக்க உள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு முன்வைத்திருந்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த வருடங்களில் உள்நாட்டு நிறுவனங்களினூடாகவே சீருடைத் துணி கொள்வனவு செய்யப்பட்டது. எனினும் மாணவர்களுக்கு விநியோகிக்கத் தேவையான 20 மில்லியன் மெற்றிக் தொன் சீருடைத் துணி உள்நாட்டில் கிடைக்காததால் கடைசி நேரத்தில் கூடுதல் விலைக்கு சீருடை துணிகள் பெறப்பட்டதாக அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல கூறினார். (6)

# இரண்டாவது டெஸ்ட் போட்டி

# வெற்றி தோல்வியின்றி முடிவு

## இலங்கை அணி தொடரில் முன்னிலை



(கொழும்பு)

இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்தது.

இதன் மூலம் இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற கணக்கில் தொடர்ந்து முன்னிலையிலுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்ற இலங்கை அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இந் நிலையில் இரண்டாவது டெஸ்ட் ந்த 26ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 642 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிபில் 9 விக்கெட்டுக்களையிழந்து 669 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந் நிலையில் ஐந்தாவதும் இறுதியுமான நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 225.2 ஓவர்களில் 707 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் பிரஜன் ஓஜா ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் இஷாந்த் சர்மா 27 ஓட்டங்களையும் எடுத்தனர்.

முன்னதாக சச்சின் டெண்டுல்கர் 203 ஓட்டங்களையும் ரெய்னா 120 ஓட்டங்களையும் சேவாக் 99, தோனி 76, முரளி விஜய் 58 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அஜந்த மெண்டிஸ் 4 விக்கெட்டுக்களையும் திலகரட்ண டில்சான் 3 விக்கெட்டுக்களையும் ராண்டீவ் 2 விக்கெட்டுக்களையும் பெர்ணாண்டோ ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 45 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களையிழந்து 129 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது.

இந் நிலையில் நேற்றைய ஆட்டத்தில் 15 ஓவர்கள் மீதமுள்ள நிலையில் இரு அணித் தலைவர்களின் இணக்கத்துடன் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிபடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் சங்கக்கார ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும் பரணவிதான 34 ஓட்டங்களையும் டில்சான் 14, சமரவீர ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக மிதுன், சேவாக், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.


இப் போட்டியில் இரட்டைச்சதம் அடித்த இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இலங்கை அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இந் நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் எதிர்வரும் 3ஆம் திகதி கொழும்பில் நடைபெறுகின்றது.

## அன்டர்சன் வேகத்தில் பாகிஸ்தான் அணி சரிவு

### மோர்கன் சதத்தில் மீண்டது இங்கிலாந்து



(நோட்டிங்காம்)

அன்டர்சனின் வேகத்தில் சிக்கிய பாகிஸ்தான் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களையிழந்து 147 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று முன்தினம் நோட்டிங்காமில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 354 ஓட்டங்களை எடுத்து சகலவிக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் மோர்கன் 130 ஓட்டங்களையும் கொலின்வூட் 82 ஓட்டங்களையும் ஸ்ரொரஸ், 45 திரோட் 38 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் முகமெட் ஆசிப் 5 விக்கெட்டுக்களையும் முகமெட் அமீர் 3 விக்கெட்டுக்களையும் உமர் குல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முன்னணித்துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிபில் 147 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்களையிழந்தது.

இதில் சொகைப் மலிக் 38 ஓட்டங்களையும் உமர்குல் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் முகமெட் அமீர் 25 ஓட்டங்களையும் பர்கார்த் 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.


பந்துவீச்சில் ஜேம்ஸ் அன்டர்சன் 5 விக்கெட்டுக்களையும் இப்பின் 3 விக்கெட்டுக்களையும் பிரோட் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.









சம்பத் வங்கியின் மானிப்பாய் கிளை திறப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மானிப்பாய் கிளையை சம்பத் வங்கியின் பொது முகாமையாளர் திறந்து வைப்பதையும் முதலாவது வைப்பினை வர்த்தகர் ஒருவர் மேற்கொள்வதையும் படங்களில்காணலாம்.

# ஐ.நா. நோக்கிய சிவந்தனின் பயணம் நேற்று 7ஆவது நாளாகவும் தொடர்ந்தது

(கொழும்பு)

தமிழ் மக்களுக்காக நீதிகேட்டு நேற்று 7வது நாளாக சிவந்தனின் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை நோக்கி தனது மனித நேய நடைப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

கடும் வெயில்,காற்றின் மத்தியில் ஏற் றம் இறக்கமான பிரதேசங்கள் ஊடாக அவரது பயணம் நடைபெற்றது.

மிகவும் களைத்த நிலையிலேயே சிவந்தன் தனது உறுதிமிக்க மனிதநேயப் பயணத்தை தொடர்கிறார் என அங்கிருந்துவரும் செய்திகள்தெரிவிக்கின்றன.

நேற்று காலையிலிருந்து நண்பகல் வரை சுமார் 11 கிலோமீற்றர்கள் அவர் நடந்திருக்கின்றார். அமீனாஸ் (Amiens) நகரத்தை நோக்கி நடந்துகொண்டிருக்கும் அவர் பாரிஸ் நகரை அடைவதற்கு இன்னும் 160 கிலோமீற்றர்கள் நடக்கவேண்டியுள்ளது.

பாரிசில் இருந்து ஜெனீவா நோக்கி 600 கிலோமீற்றர்கள்வரை நடந்து செல்லவேண்டியுள்ளதால் மொத்தம் ஆயிரம் கிலோமீற்றருக்கு மேற்பட்ட துரத்திற்கு சிவந்தன் நடந்து செல்லுகின்றார்.

சிவந்தனுக்கு துணையாக லண்டனில் இருந்து அவருடன் சென்றிருந்த இலக்கியனும் அவ்வப்பொழுது இணைந்து நடந்து செல்வதுடன், பிரான்சின் கடற்கரையான கலைசில் இருந்து பொஸ்கோ என்ற இளைஞனும் வேறு சிலரும் இணைந்து நடந்து செல்கின்றார்.

இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் மீது சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும், கொல்லப்பட்ட அப்பாவி மக்களிற்கு நீதி கிடைக்கவேண்டும், தடுப்பு முகாம்களில் உள்ளவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். மனித உரிமைகள் மதிக்கப்படும் வரை இலங்கையைப் புறக்கணிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை நோக்கி நீதி கேட்டு சிவந்தன் இந்த நடைப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். (ச-5)

## பென்டகன் மீதான விமான...

தமது முன்னெடுப்புக்களை ஆரம்பித்துள்ளதுடன் போராட்டக்குழுக்கள் தொடர்பில் கொள்கைகளையும் அவைமாற்றிக்கொண்டன.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான சர்வதேச உதவிகளையும் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. இதற்கிடையில் உலகின் எந்த ஒருநாட்டிலும் தனி நாட்டுக் கோரிக்கை சாத்தியப்படாத ஒன்றாக இருப்பதாகவும் அந்த கருத்துக்கான வரவேற்பும் குறைந்துவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இறுதியுத்தம் இடம் பெற்ற காலப் பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையுடன் தாம் தொடர்பில் இருந்ததாக தெரிவித்துள்ள அவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் சரணடைவு தொடர்பில் இதன் போது பேசப்பட்டு வந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இது தொடர்பில் விரைந்து இயங்கவில்லை எனவும் நிலைமை மிகவும் பாரதூரமாக சென்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் வடமாகாண அபிவிருத்திக்காக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று அவரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதில் வழங்கிய குமரன் பத்மநாதன் அதற்கான நிதிகள் திரட்டப்பட்டு வருவதாகவும் வடமாகாணத்தை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கான நிதி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டதாக அரசாங்கம் கடந்த வருடம் மே மாதம் அறிவித்திருந்தது. அதனை முதலில் மறுதலித்த குமரன் பத்மநாதன் தலைவர் பத்திரமான இடத்தில் பாதுகாப்பாக இருப்பதாக ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

எனினும் சில நாட்களுக்குப்பின்னர் அந்த கருத்தினை மாற்றி தலைவர் இறந்து விட்டதாகவும் புதிய தலைவராக தாம் செயற்படப் போவதாகவும் அறிக்கைவிட்டிருந்தார்.

இந்த நிலையில் தாய்லாந்தில் வைத்து கைது செய்யப்பட்ட அவர் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு அரசாங்கத்தினால் தடுத்துவைக்கப்பட்டதாக கூறப்பட்டது. எனினும் அவர் சுதந்திரமாக நடமாடிவருவதாக எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த செவ்வியின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறுதி யுத்தத்தின் போதும் அமெரிக்காவின் பென்டகன் இரட்டைக் கோபுரம் மீதான தாக்குதல் தொடர்பிலும் புரிந்துகொள்ளத்தவறிவிட்டதாக குற்றம் சுமத்தியுள்ளார். (ச-5)

## ஐக்கிய நாடு...

இன்றைய யுத்தமற்ற சூழலில் இந்த அலுவலகத்தின் செயற்பாடுகள் குறைந்து விட்டதால் இதைத் தொடர்ந்து நடத்துவதற்கான நிதியை வழங்குவதில்லை என்கிற தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் எடுத்திருக்கிறது.

இந்த அலுவலகத்தில் 17 ஊழியர்கள் பணியாற்றி வந்தனர் என்றும் அவர்கள் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளார்கள் என்றும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றனர். (ச-5)

## பாகிஸ்தான் பொலிஸ் மீ நீதிமன்றம் குற்றச்சாட்டு

கடந்த வருடம் லாகூர் நகரில் இலங்கைக் கிரிகெட் வீரர்கள் பயணம் செய்த பஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்ட விவகாரத்தில் அசட்டையாக இருந்ததாக பாகிஸ்தானின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் பலர் லாகூர் மேல் நீதிமன்றத்தால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

இவ்விடயத்தில் அசட்டையாக இருந்ததாக 12இற்கும் அதிகமான பொலிஸாரை அறிக்கை ஒன்றில் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இப்பொலிஸார் த
களை முறையாக செய்யவில்லை
மன்றம் தெரிவித்துள்ளது. கடந்
மார்ச் மாதம் மேற்கொள்ளப்பட்ட
குதலின்போது இலங்கை அணிக்
பாகச் சென்ற 6 பொலிஸாரும் வான்
ருவரும் உயிரிழந்தமை குறிப்பிடத்
சம்பவம் குறித்த அறிக்கையை ச
மாறு பாக். கிரிக்கெட் சபையிடம்
கிரிக்கெட் கவுன்ஸில் வலியுறுத்திவரு

## மன்னாரின் முதல் எண்ணெய்

கெய்ன் இந்தியா நிறுவனம் எண்ணெய் வளம் தொடர்பாக முப்பரிமாண ஆய்வுகளை மேற்கொண்டதாகவும் அதன் அடிப்படையில் மன்னார் கடற்படுகையில் எண்ணெய் கிணறு தோண்டப்படவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இதற்காக இந்திய நிறுவனத்தின் இயந்திரங்கள் மற்றும் ஆளணி என்பவற்றை கெய்ன் ஸ்ரீலங்கா நிறுவனம் பயன்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பெற்றோலியவள அபிவிருத்திக்குழு இலங்கையின் சார்பில் கெய்ன் சிறிலங்கா நிறுவனத்துடன் 6 ஒப்பந்தங்களைச் செய்துள்ளதாகவும் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் கெய்ன் லங்கா நிறுவனம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை போனஸாக வழங்கியதாகவும் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

இந்நிறுவனத்துடனான ஒப்பந்தப்படி எண்ணெய் அகழ்வு தொடர்பான
முடிபடைந்து எண்ணெய் அகழ
கும்போது 50 மில்லியன் டொலர்
நிறுவனம் வழங்கும்.

அத்துடன் தனது வருமானத்
வீதத்தையும் அந்நிறுவனம் இல
சுக்கு வழங்கும்.

இத் திட்டத்தின் கடைசி கட்டத்
பிக்கப்படவுள்ள தேசிய எண்ணெ
யின் 15 சதவீத பங்குகளை அந்
வாங்குவதற்கும் உடன்பாடு கா
ளது.

## இஸ்ரேலுக்...

இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

டொனால்ட் பெரேராவின் செவ்வியை இஸ்ரேல் ஊடகம் திரிவுபடுத்தி செய்தி வெளியிட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ச-5)

## அப்துல் காத

பூர்வமாக அறிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் காதருக்
ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க
வும் கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் இற
குழு கூட்டத்தில் இந்த தீர்மானம்
டுள்ளது.

எவ்வாறெனினும் தமக்கு எ
தங்களும் கிடைக்கப்பெறவில்லை
துல் காதர் தெரிவித்துள்ளார்.

## தர்சிகாவின் உள் உறுப்பு

அறிவித்திருந்தார்.

இதனையடுத்து நேற்று உடனடியாக விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.வசந்தசேனன் குறித்த சடலத்தை பிரேத அறையில் வைத்துத் துப்புரவுசெய்த பணியாளர்களை விசாரணைக்கு உட்படுத்தினார்.

இதனையடுத்து குறித்த மருத்துவ மாதுவின் சடலத்தினுள் இருந்த உடல் உறுப்புக்கள் வேறாக எடுக்கப்பட்டு யாழ். கொட்டடியில் உள்ள மயானம் ஒன்றில் நிலத்தினுள் புதைக்கப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இதனையடுத்து குறித்த இடத்துக்கு அவர்களுடன் விஜயம் செய்த நீதிவான் அந்த உறுப்புக்களை எடுத்து கொழும்புக்
மாறு உத்தரவிட்டார். இந்த உத்தர
மேற்படி உள் உறுப்புக்கள் மீள தோ
கப்பட்டு யாழ். போதனா வைத்திய
வைக்கப்பட்டுள்ளன.

இவை இன்று சனிக்கிழமை செ
அனுப்பிவைக்கப்படவுள்ளது. இதே
மன்றிற்கு மதுபோதையில் வந்த
சடலம் தோண்டப்படும் போது மயான
மை போன்றன நீதிமன்றை அவமதி
என்ற குற்றச்சாட்டின் பேரில் ஊழிய
வரையும் எதிர் வரும் 2ஆம் திகதி தி
வரை விளக்க மறியலில் வைக்குமா
ஆர்.வசந்தசேனன் உத்தரவிட்டுள்


Be a JAVA Programmer

Advanced Diploma in JAVA Programming

- Logic Building With 'C'
- Oops Using C++
- Hyper Text Markup Language
- Sun Java 2.0
- Remote Method Invocation
- Servlets, Project

ASIAN COMPUTERS

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 021-222 5677 (2048)

தரம்:5 மாதிரி வினாப்பத்திரம்

எதிர்பார்க்கப்படும் வினாக்கள், 5மாதிரிக் கட்டுரைகள், விசேட கையேடு, பரீட்சை வழிகாட்டி,

வெற்றித்தேர்வு கருத்தரங்கில்கலந்துகொள்ளாதோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். புத்தகசாலைகளில்....

2010 - தரம்:4 வெற்றித்தேர்வு -5,6,7

அனைத்து புத்தகசாலைகளிலும் தொடராக பெறுங்கள்

தொடர்புகளுக்கு: 0773126807 / 0775388471

யாழ்.மாவட்ட கேபிள் TV நடத்துனர்களுக்கான



அவசர கலந்துரையாடல்

கேபிள் TVக்கான அனுமதிப்பத்திரம்,அதற்கான கட்ட
சனல்களுக்கான கட்டணம் யாழ்.மாவட்டத்திற்கு ஏற்ற
தொழில்நுட்பம் மற்றும் கேபிள் TV நடத்துனர்களு
அடிப்படை விபரங்களும் ஆலோசனைகளும் வழங்கப்
தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு வேண்டுகி

நாள்: 01.08.2010 காலை 10 மணி

இடம்: Jaffna Technical Institute
Clock Tower Road, Jaffna.

தொடர்புகளுக்கு: 0777710785, 0775284689, 0718561

Mr. Concrete

For all your concrete needs!

SLSI - தரத்திற்கு அமைய நவீன இயந்திரங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டவை.

Sales Office: 124, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் www.MrConcrete.lk

Factory: கொடிகாமம் வீதி, புலோலி. Tel: 0217 222 333

உங்கள் சகல கொங்கிறீட் தேவைகளுக்

- கொங்கிறீற் கற்கள்
- ஓட்டைக் கற்கள்
- வேலித் தூண்கள்

இலவச விநியோகம்




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.07.2010 இல் அச்சிட்டு வெ